297

# கன்மோகினி

**மோகினி**
அன்பர்களுக்கு
ஓர்
**அரிய விருந்து**

*Jaganmohini*
*The only Ladies' Magazine in Tamil*
*Commands the LARGEST circulation*
*among monthly journals*

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
18 AUG 1943
MADRAS

என்ன வரப்போகிறது?

?

297

அடுத்த இதழில்

இதே இடத்தை

கவனியுங்கள்.

**நினைவிருக்கட்டும்**

ஸ்ரீமதி கமலா பத்மநாபன்

3C
NB 20.8
183082

Vol. 20. No. 8.

AUGUST 1943.

ஆசிரியை-
வை. மு. கோதைநாயகி அ

# ஜகன்மோகினி

நிகரற்ற மாதப்பத்திரிகை

வருஷ சந்தா ரூ. 2 4

தனிப்பிரதி அணு 3


## விஷய அட்டவணை


| | | |
|---|---|---|
| காலைப் பாட்டு (முருகக்கடவுள்மீது) | பி. ஸ்ரீ. | 1 |
| உண்மைச் சித்திரம் 1. கோயில் ப்ரஸாதம் | வை. மு. கோ. | 2 |
| ஜிஜிபாய் | "குகப்ரியை" | 4 |
| ஸ்திரீ எழுத்தாளர்கள்-7. ஸ்ரீமதி கமலா பத்மனாபன் | ஸ்ரீமதி எஸ். அலமேலு | 9 |
| "அந்த இரு கண்கள்" | ஸ்ரீமதி எம். எஸ். கமலா | 11 |
| விகட வெடிகள் | "விருச்சிகம்" | 14 |
| குழந்தையின் வளர்ச்சியில் தாயின் மகிழ்ச்சி | ஸ்ரீ பி. ஆர். ராஜசூடாமணி | 15 |
| அநுபவ நீதிசாரம் | வை. மு. கோ. | 16 |
| மதுரகீதம்-61-வது நாவல் (தொடர்ச்சி) | வை. மு. கோ. | 89-104 |


## "மதுர கீதம்" ஆரம்பம் முதல்

சந்தாதாரராகச் சேர விரும்புவோர் ரூ. 1-14-0 முன்பணமனுப்பவும். (மார்ச் முதல் டிஸம்பர்வரை 10 இதழ்கள் 3 அணு வீதம்.)

### இந்த சஞ்சிகையின் தொடர்ச்சி

உங்கள் ஊரில் கிடைக்காவிடில் உடனே அணு 12 மணியாடர் அனுப்பினால் டிசம்பர் முடிவுவரை அனுப்பப்படும்.

## சந்தா நேயர்கள் அவசியம் கவனிக்கவும்

இவ்வருட ஆரம்பத்தில் ரூ. 1—8—0 அனுப்பிய நேயர்கள், இவ்வாண்டு முடிவுவரை சஞ்சிகையைப் பெற இன்னும் 10 அணு செலுத்தவேண்டியிருப்பதால் அதை உடனே அனுப்பக் கோருகிறோம்.

## இடம் மாறும் நேயர்கள்

மாத முடிவுக்குள் தமது புதிய விலாசத்தை தெரிவிக்காவிடில் முதல் தேதியன்று பழைய விலாசத்திற்கே சஞ்சிகையை அனுப்ப நேரிடுகிறது. அது அவர்களுக்குச் சேராவிடின் அதற்கு நாம் ஜவாப்தாரி யன்று.

மேலும் சிலர், ஒரு மாத சஞ்சிகை வந்த பிறகு முன் மாதத்தியது வரவில்லையென்று எழுதுகிறார்கள். இம்மாதிரி தவறுதல்களுக்கு சஞ்சிகையின் விலையை அனுப்பினால்தான் மறுபடியும் சஞ்சிகை அனுப்பப்படுமென்பதைக் கவனிக்கவும்.

## நமது நாவல்களின் விலைகள் 1—5—'43 முதல்

அதிமாக்க நேர்ந்ததைப் பற்றி மே இதழிலேயே அறிவித்திருந்தும் சிலர் அதை கவனியாமல் பழைய விலைப்படி அனுப்புகிறார்கள். நேயர்கள் தயவுசெய்து புது விலைப்படி முன்பணமனுப்பி தபால் செலவின்றி பெற்றுக்கொள்ளவும்.

பேபர் பஞ்சத்தின் காரணமாக சந்தா நேயர்களுக்குக் குறைந்த விலை முன்போல அளிக்கமுடியாமைக்கு வருந்துகிறோம்.

### சென்னை நேயர்கள்

தங்களுக்கு வேண்டிய புத்தகங்களையும் சஞ்சிகைகளையும் சென்னை [illegible]பீஸில் (26 தோடி வீதி; திருவல்லிக்கேணி) அடியிற்கண்ட நேரங்[illegible] பெற்றுக்கொள்ளலாம்.

[illegible]லை 9-30 வரை; பகல் 11 முதல் 3 வரை: மாலை 7-மணிக்குப் பிறகு.

மானேஜர்.

ஸ்ரீராமஜயம்.

சுபானு ஹூ ஆடிமீ

ஆகஸ்டு 1943

மலர் 20 இதழ் 8

ஐயுணர் வெய்தியக் கண்ணும் பயமின்றே
மெய்யுணர் வில்லா தவர்க்கு. -திருவள்ளுவர்

ஜகன்மோ கினியென்னுஞ் சஞ்சிகையைக் காக்க
ஜகன்மோ கினி! மனத்தைச் சார்ந்து. -வீரராகவ கவி

August. 1943. Vol. 20. No. 8

183082

**பி.ஸ்ரீ**

# காலைப் பாட்டு

## (முருகக் கடவுள்மீது)

சுப்பிரமணிய பக்தர் ஒருவர் அதிகாலையில் எழுந்து கடற்கரைக்கு வருகிறார். அங்கே முருகக்கடவுளின் கோவிலும் கோபுரமும் [illegible] கம்பீரமாக அமைந்திருக்கின்றன. அந்த வேளையில் சங்கநாதமும் [illegible] கேட்கிறது. மனிதனுடைய சக்திக்கும், புத்திக்கும் எட்டாத தெய்விக விஷயங்களைக் குறித்து, அவருடைய இதயத்தோடு அந்தச் சங்கு ஏதேதோ பிரஸ்தாபிக்க விரும்புவதுபோல் விம்மிக்கொண்டிருக்கிறது.

கோழி கூவுகிறது. காகம் கரைகிறது. அருணோதயமாகிவிட்டது. பல இடங்களில் அன்பர்கள் பாடும் தோத்திரப் பாடல்களும், சில சமயங்களில் வீணாகானமும், காதில் வந்து விழுகின்றன. ஒரு சமயம் பூமாலைகளைக் குறித்தும், அபிஷேகத்தைக் குறித்தும் தொண்டர்கள் பேசிக்கொள்வதும் காதில் விழுகிறது.

சூரியோதயம். சமுத்திரமும் கோயிலும் தெய்விக அழகு பெற்று விளங்குகின்றன. வானமும் பூமியோடு சேர்ந்து ஏதோ ஒரு வழிபாட்டில் கலந்துகொண்டதுபோலத் தோன்றுகிறது.

நமது பக்தர் அப்படியே பரவசமாகி அந்தக் காலை வேளையில், **சக்தியின்** அறிகுறியான வள்ளியோடும், அழகின் அறிகுறியான மயிலோடும் தரிசனம் கொடுக்க வரும்படி முருகக் கடவுளைப் பாடி அழைக்கிறார்:—

‘‘வாரும், வாரும், தெய்வ வடிவேல் முருகரே!
வள்ளிம ணாளரே! வாரும்; புள்ளிம யிலோரே! வாரும்.

சங்கொலித்தது, தாழ்கடல் விம்மிற்று;
சண்முக நாதரே! வாரும்; உண்மைவி னோதரே! வாரும்;

பொழுது விடிந்தது, பொற்கோழி கூவிற்று;
பொன்னுன வேலரே! வாரும்; மின்னுர் முந்நூலரே! வாரும்;

காகம் கரைந்தது காலையும் ஆயிற்று,
கண்ணுதல் சேயரே! வாரும்; ஒண்ணுதல் நேயரே! வாரும்;

செங்கதிர் தோன்றிற்று, தேவர்கள் சூழ்ந்தனர்;
செங்கல்வ ராயரே! வாரும்; எங்குரு நாதரே! வாரும்;

சூரியன் தோன்றினன், தொண்டர்கள் சூழ்ந்தனர்;
சூரசங்காரரே! வாரும்; வீரசிங்காரரே! வாரும்;

சேவல் ஒலித்தது, சின்னம் பிடித்தனர்;
தேவர்கள் தேவரே! வாரும்; மூவர் முதல்வரே! வாரும்;

**மாலை கொணர்ந்தனர், மஞ்சனம் போந்தது;**
**மாமயில் வீரரே! வாரும்; தீமையில் தீரரே! வாரும்;**
**வீணை முரன்றது, வேதியர் சூழ்ந்தனர்;**
**வேலாயு தத்தோரே! வாரும்; காலாயு தத்தோரே! வாரும்;**
**பக்தர்கள் சூழ்ந்தனர், பாடல் பயின்றனர்;**
**பன்னிரு தோளரே! வாரும்; பொன்மலர்த் தாளரே! வாரும்;''**

ஸ்ரீ இராமலிங்க ஸ்வாமிகள் அருளிய இந்தப்பாட்டு எவ்வளவு லளிதமாகவும் இசையுடனும் அமைந்திருக்கிறதென்பது பாடிப்பார்த்தால் இனிது புலனாகும்.

**உண்மைச் சித்திரம்** — **வை. மு. கோ.**

# 1. கோயில் ப்ரஸாதம்

கற்பனையினால் ச்ருஷ்டிக்கும் ஹாஸ்யங்களைவிட சிலசமயம் நேரில் நடப்பது ப்ரமிக்கத்தகுந்ததாகவும் என்றுமே மறக்கமுடியாத உணர்ச்சி உள்ளதாகவும் இருக்கிறது. அம்மாதிரியான சம்பவங்கள் ஒவ்வொருவருடைய வாழ்க்கையிலும் எண்ணிறந்தவை நடக்கின்றன. அத்தகைய அற்புத சம்பவங்களையும் சிலசமயம் சிலர் மறந்து விடுகிறார்கள். சிலரோ என்றென்றும் மறக்காது நினைவில் வைத்திருந்து சமயம் வரும்போது அந்த இடத்தில் சொல்லிச் சிரிக்கிறார்கள். எழுதும் திறமை உள்ளவர்களோ, தமக்கு இத்தகைய சம்பவம் ஒன்று கிடைக்குமா என்று காத்திருந்து முதலில் மனத்தகட்டில் நன்றாகப் பொறித்துக்கொண்டு பிறகு அதை ஏட்டில் அழகுபட உருவாக்கி அன்பர்களுக்கு விருந்தாக அளிக்கிறார்கள். இந்த முறையில் ஒரு அல்ப விஷயத்தைக்கூட வீணாக்காமல் பயன்படச் செய்த பெருமை காலஞ்சென்ற பெரிய கிழவர் ஸ்ரீமான் உ. வே. ச்வாமிநாத ஐயர் அவர்களுக்கே முதன்மையாகும். இன்னும் சிலரும் அந்த வழியைக் கையாளுகிறார்கள். எத்தகையவர்களாக இருப்பினும் இம்மாதிரி சம்பவங்களைத் தாமே நேரில் எழுதத் தெரியவில்லையெனினும் குறிப்புகளாவது எழுதி, எழுதுகிறவர்களிடம் கொடுத்தால் விஷயம் உருப்படியாகி பயன்படும் என்பதை மறக்கக்கூடாது. மேற்குறித்த உண்மைச் சம்பவங்கள் நினைவிலுள்ளவற்றை ஒவ்வொன்றாக எழுதத் தீர்மானித்திருக்கிறேன்.

சில வருடங்களுக்கு முன்பு நாங்கள் மிகவும் அன்பான சிநேகிதர்கள் சிலருடன் ஸ்வாமி தரிசனத்தின்பொருட்டு யாத்திரையாக முக்ய க்ஷேத்திரமாகிய ஸ்ரீரங்கம் சென்றிருந்தோம். ஸ்ரீரங்கத்தில் காவேரி ஸ்நானம் செய்தபிறகு கோயிலுக்குச்சென்று "குணதிசை முடியை வைத்து"... என்று பக்தியால் பண்பட்ட உள்ளத்துடன் உருகிப் பாடியுள்ள, எம்பெருமான் ஸ்ரீரங்கநாதனையும் ஸ்ரீரங்கநாயகியையும் தரிசனம்செய்து பின் மற்ற கோயில்களிலும் ஸேவித்துவிட்டு நேரே உத்தமர் கோயிலுக்குச்சென்றோம்; அப்போது உச்சிகாலங்கூட ஆய்விட்டது. முன்னதாகத்தெரிவித்திருந்ததால் எங்களுக்கு வெகு ஆனந்தமாகஸேவை கிடைத்தது. ஒவ்வொரு ஊரிலும் முக்யமான இடங்களையெல்லாம் என் குமாரன் ஸ்ரீநிவாஸன் '**ஸ்ரீவத்ஸன்**' புகைப்படமெடுப்பதுபோல் உத்தமர் சன்னிதியில் சில இடங்களைப் படம் பிடித்துவிட்டு காமெராவைத் தனது துணியில் சுற்றி கோயிலுக்கு முன்பக்கம் வைத்துவிட்டு சன்னிதிக்குச்சென்று திரும்பிவந்தோம்.

அங்கிருந்த ஒருவன் ''அம்மா! என்று கையை நீட்டினான். நாங்கள் ஸ்வாமிக்கு நிவேதனம் செய்து கொண்டுவந்த தேங்காய், பழம் இரண்டையும் கொடுத்ததோடு எங்கள் மோட்டாருக்குக் காவல் இருந்ததால் ஒரு அணா காசையும் கொடுத்துவிட்டுச் சாமான்களை எடுத்துக்கொண்டு கிளம்பினோம்.

எங்களுடன் கூடவந்திருந்த ஒரு பெரிய அம்மாள் மகா சீலவதி; மிகுந்த ஆசாரமும் தெய்வ பக்தியும் கொண்டவர். சிநேகிதர்களை உபசரிப்பதில் அந்தம்மாளிடம் மற்றவர்கள் பிச்சை வாங்கவேண்டும். அவர்கள் வீட்டிற்குச் செல்லும் சிநேகிதர்கள் வயிற்றைப் பெருக்கிக்கொண்டாலன்றி சமாளிக்க முடியாது. விருந்து சாப்பாடுகளும் பலகாரங்களும் பழவகைகளும் பெற்ற தாயை

விடப் பெரிய தாயாகப் பாசத்துடன் அன்பு ததும்ப பேசிக்கொண்டே ஊட்டு வார்கள் என்றால் மிகையாகாது. பார்ப்பதற்கும் ஸ்ரீமகா லக்ஷ்மியைப்போல் வெகு கம்பீரமாயும் சாந்தமும் புன்னகையும் நிறைந்த முகபாவத்துடனும் இருப் பார்கள். அவர்களைப் போலவே அவர்களின் குடும்பத்திலுள்ள ஒவ்வொருவரும், குழந்தைகளும்கூட, விருந்தினரிடம் அன்பாயிருப்பார்கள் என்றால் வேறு கூறுவ தற்கு என்ன இருக்கிறது? அத்தகைய புனிதவதியும் ஒரு மூட்டையை எடுத்துக் கொண்டு கிளம்பினார்கள். முன்பு அம்மா என்று கையை நீட்டிய அதே மனிதன் மீண்டும், "அம்மா! அம்மா! என்று எங்களைப் பின்தொடர்ந்தான். அந்தம் மாளின் மருமகள் மற்றொரு தேங்காய் மூடியை அவனிடம் கொடுத்துவிட்டு "போடா! வெறுமெ தொந்தரவு செய்யாதே" என்று கூறியவாறு மீண்டும் நடந் தோம். அவனோ விட்டுப் போகும் வழியைக் காணவில்லை. "யம்மா! யம்மா! அந்த மூட்டை" என்று இழுத்தான். அதற்கந்த பெரியம்மாள், "நன்றாயிருக்கடா! ப்ராம்மணாள் மடியாகக்கொண்டு போற மூட்டையை நீ தொடக்கூடாது. போடா முட்டாள்" என்றார்கள். இதற்குள் கோயிலுக்கு வெளியில் நின்றிருந்த காருக் கருகில் வந்துவிட்டோம் அந்த மனிதன் எங்களை எல்லாம் விட்டுவிட்டு பெரியம் மாளிடம் ஓடிப்போய், "யம்மா! யம்மா... வயித்தெ பசிக்குது யம்மா! சூத்திரன் தீட்டு ஆகாது. யம்மா...யம்மா"...என்று கெஞ்சும் முறையில் கேட்டான்.

"வயித்தெப் பசித்தால் நாங்கள் என்னடப்பா செய்றது...ஏதோ ஸ்வாமி ப்ரஸாதம் கையிலிருந்ததைக் கொடுத்தோம். அதைச் சாப்பிட்டுவிட்டுப்போ... எங்கள் வீடா இருந்தால் சோறு போடலாம். இங்கு என்னசெய்ய முடியும்?" என்று கூறிக்கொண்டே நடந்தார்கள். மீண்டும் அவன் பின்தொடர்வதைக் கண்டு எங்கள் எல்லோருக்கும் எரிச்சலாக வந்தது. 'கொடுக்கிறவர்களைத்தான் பிடுங்கித் தின்பது வழக்கம். முதலிலேயே இல்லையென்று சொல்லியிருந்தால் நீ இப்படி வரமாட்டாய்! நீ என்ன கல்லடிசித்தனா! போடா போ! சும்மா வராதே' என்று சற்று சீறிவிழுந்தாள்.

ஐயோ பாவம்! அந்த மனிதன் மகா சாது ப்ரக்ருதி என்பதைப் பிற கல்லவா அறிந்துகொண்டோம். சிள்ளென்று விழுந்த பிறகு "தாயே...யம்மா... நான் ஒங்களே ஒன்னும் கேக்கலேயே...என் சோத்துமூட்டெயெதானே கேக் கறேன்...இந்த கோவில்லெ ஒரு பில்லெ கட்டளெ உண்டு. அத்தெ வாங்கி எங் கந்தையிலெ சுத்தி வச்சிருந்தேன்...அத்தெ பெரியம்மா தூக்கிகிணுங்களே... ஒருவேளெ மோட்டார் ஓட்றவனுக்கு கொடுத்துடப் போறுங்களாங்காட்டியமுனு ஓடிவரேன். என் சோத்து மூட்டையைக் கொடுத்தா ஓடிப்பூட்றேன்" என்றான்.

இதைக் கேட்டதும் பெரியம்மாளை ஒரு முழம் தூக்கி வாரிப்போட்டது. எங்களுக்கோ சிரிப்பு வயிறு புண்ணாகிவிட்டது. "ஐயையோ! ஒன் சோத்து மூட்டையா! அட ரங்கநாதா...காவேரிலே ஸ்நானம் செய்துவிட்டு மடியாவந்த எனக்கு ஒன் சோத்து மூட்டையா கிடச்சுது...ஸ்ரீனிவாஸா! ஒன் போட்டோ மூட்டை என்றல்லவா நான் எடுத்துக்கொண்டேன்...அடாடா! க்ரகச்சாரமே... இந்தாடாப்பா ஒன் மூட்டை" என்று மூட்டையைக் கொடுத்தார்கள்...அவனுக்கு இருந்த பசியில் அவன் எங்கள் எதிரிலேயே சாப்பிட உட்கார்ந்துவிட்டான்.

அனாசார மூட்டை என்று தெரிந்தவுடனே அந்தம்மாளுக்கு மிகவும் அருவருப்பும், ஒருமாதிரியானஉணர்ச்சியும் உண்டாகிவிட்டன. உத்தமர் கோயில் வாசலிலேயே ஓடும் காவேரிக் கால்வாயைப் பார்த்து "நான் இந்தக் காவேரியில் முதலில் ஸ்நானம் செய்துவிடுகிறேன்" என்றார்கள். "கோயிலுக்குப் போய்விட்டு வரும்போது ஸ்நானம் செய்வது அபசகுனமாயிற்றே, ஜலத்தை ப்ரோக்ஷித்துக் கொண்டு சோத்துமூட்டை பட்ட இடம்வரையில் புடவையை நனைத்துக்கொள் ளுங்கள்: வீட்டிற்குப்போய்புடவை மாற்றிவிடலாம்'என்றேன். தலைக்குப்ரோக்ஷித் துக்கொண்டு புடவையைநனைத்து மடிசெய்துகொண்டுபிறகுதான்கிளம்பினார்கள். அதற்குப் பிறகு அந்தம்மாள் எந்த மூட்டையை எடுப்பதானாலும் அதைப் பார்த்து பார்த்துத்தான் எடுப்பார்கள். எப்படியிருக்கிறது இந்த உண்மைச் சம்பவம்?

# ஜீஜீபாய்

மாமனுருக்கும் மாப்பிள்ளைக்கும் பகை. இதென்ன பிரமாதம். நம் நாட்டிலே மாமனுக்கும் மருமகனுக்கும் பகை ஏற்படக் காரணம் வேண்டுமா? ஏறினுல் குற்றம்! இறங்கினுல் அபராதம் என்று நினைக்கக் கூடியவர்கள் பலரை இன்றும் பார்க்கிருேமே என்று நீங்கள் நினைக்கலாம். இந்த மாமனுரும் மாப்பிள்ளையும் அந்த கோஷ்டியில் சேர்ந்தவர்களல்ல. இவர்களது பகை சரித்திரப் பிரசித்தம்.

ஆனுல் கணவனுக்காகத் தந்தையிடம் போர் செய்த அந்த வீரப் பெண்மணியை உங்களுக்குத் தெரியுமா? பாரதநாட்டிலே பிறந்த ஒவ்வொருவருக்கும் அவள் பெயர் தெரிந்துதானிருக்கும். சத்ரபதி **சிவாஜியின்** வீரத்தாய் **ஜீஜாபாயைத்** தெரியாதவர்கள் உண்டா? அவள் தன் மகனைமட்டும் வீரனுக்கவில்லை. அவனது விளையாட்டுத் தோழர்களைக்கூட மகா வீரர்களாக்கிவிட்டாள். அவள் நெஞ்சிலே சுதந்திர வெறி மூண்டது. 'நாமிருக்கும் நாடு நமது' என்ற உண்மையைத் தன் மகனுக்கு ஊட்டி, ஒரு சாம்ராஜ்யத்தையே ஸ்தாபிக்கவல்லவனுக ஆக்கிவிட்டாள். சரித்திர வானிலே அவள் பெயர் பொன்மயமாக மின்னுகின்றது.

அன்று வஸந்த பஞ்சமி. நகரமுழுவதும் ஒரே கோலாகலம். அஹமத்நகரின் பிரதான கர்மசாரி லூக்ஜீயின் அரண்மனை மிகவும் விமரிசையாக அலங்கரிக்கப் பட்டிருந்தது. **லூக்ஜீ,யாதவராவ்,** என்கிற அந்த மகாராஷ்டிர வீரன் "ஹோலி" பண்டிகை கொண்டாடும் பொருட்டு தன் கீழுள்ள எல்லா அதிகாரிகளையும் அழைத்திருந்தான். **மாலோஜீபான்ஸ்லா,** என்கிற வீரனும் அவர்களுள் ஒருவன், எல்லோரும் உயர்ந்தவர் தாழ்ந்தவர் என்ற பேதமின்றி ஒருவரையொருவர் பரிகசித்துக்கொண்டும், பேசிக்கொண்டுமிருந்தனர்.

மாலோஜியின் மகனுக்கு வயது பதினுன்கு இருக்கலாம். அவனையும் உடனழைத்துவந்திருந்தான். லூக்ஜீயின் அருமைக் குமாரி ஜீஜீபாய் தந்தையோடு தானும் வந்துகொண்டிருந்தாள். இன்னும் சிலரும் குழந்தைகளை அழைத்து வந்திருந்தனர். ராதையைப்போல் வேஷமணிந்து வந்திருந்த ஜீஜீயை மற்றக் குழந்தைகள் சூழ்ந்துகொள்ள, எல்லோரும் ஓடிப் பிடித்து விளையாடத் தொடங்கினர். மாலோஜியின் மகன் **ஷாஜி** அங்கு வந்திருந்தவர்களுள் வயதில் மூத்தவன். ஆகவே அவன் ஒரு நொடியில் அக்குழந்தைகளின் கூட்டத்திற்குத் தலைவனுனன்.

அவன் கைகளையும் தலையையும் அசைத்து அசைத்து வெகு ஸ்வாரஸ்யமாய் எதையோ விவரித்துக்கொண்டிருந்தான். ஆச்சர்யத்தினுல் மலர்ந்த கண்களுடன் அவன் அருகே நின்று திறந்த வாயுடன் அவன் சொல்வதையெல்லாம் ஊக்கத்துடன் கேட்டு நின்றுள் ஜீஜீ. அந்தக் காட்சி அங்கிருந்த முதிய மந்திரி **தேவாஜிராவின்** கண்களைக் கவர்ந்தது. தற்செயலாய் இவர்களைக் கண்ட லூக்ஜீயின் கண்களும் அதைக்கடந்து செல்லாமல் அங்கேயே நின்றன. தேவாஜீராவின் முகத்திலே திருப்தியோடு கூடிய ஒரு முறுவல் தோன்றிற்று. "நல்ல ஜோடிகள்தான்" என்ற சொற்கள் அவர் வாயினின்றும் எழுந்தன. இந்த வார்த்தைகள் லூக்ஜீயின் செவிகளுள் விழ அவனும் அவரை ஏறிட்டுப் பார்த்தான். அவ்வளவோடு நின்றிருக்கக்கூடாதா? உற்சாகமான சமயம். தமாஷாகக் கண்களைச் சிமிட்டியவனுய் "என்ன ஜீஜி! இந்தப் பையனைக் கல்யாணம் செய்துகொள்ளுகிருயா?" என்றுன்.

சின்னஞ்சிறு குழந்தை. வயது ஏழுதான். ஆனுலும் தந்தைக்குப் பதில் சொல்லவேண்டுமென்று தோன்றிற்றே என்னமோ! "ஆகா! செய்துகொள்ளுகிறேன்" என்ற மழலைச் சொல்லின் ஒலி சபை முழுவதும் கேட்டது. கொல்லென்று மண்டப முழுவதும் சிரிப்பின் அலை பரவிற்று. ஜீஜீ நாணிக்கோணியவளாய் தந்தையின் உத்தரியத்தினுல் முகத்தை மூடிக்கொண்டாள்.

இந்த சமயத்தில் மாலோஜி எழுந்து நின்றுன். நாடகமேடையில் நடிப்பவன் போல் கனைத்துக்கொண்டு, "சபையோர்களே! லூக்ஜீ யாதவராவ் அவர்கள்

என் புதல்வனை மாப்பிள்ளையாய் வரித்துவிட்டார்; இதற்கு நீங்கள் எல்லோரும் சாக்ஷி '' என்று சொல்லிவிட்டு உட்கார்ந்தான்.

லூக்ஜீ இதை ஒரு பொருட்டாய் எண்ணவில்லை. அவன் எழுந்ததும் சொன்ன தோரணையும், ஏதோ ''தமாஷ்'' செய்கிறனென்று நினைக்கச் செய்து, எல்லோரும் நகைத்தபொழுது வேடிக்கையாகத் தானும் நகைத்தான்.

* * * *

அரண்மனையில் விருந்து. லூக்ஜீயும் வந்துவிட்டான். ஜீஜியின் குழந்தையுள்ளமும் கண்களும் தோழன் வந்திருக்கிறனாவென்று நாற்புறமும் துருவித் தேடின. ''என்ன ! மாலோஜி வரவில்லையா !'' என்றான் லூக்ஜீ

'ஏன் வரவில்லை' என்று தெரிந்துவர ஓடினான் ஒருவன். ''காரணமின்றி வராமலிருக்கமாட்டான். வரவில்லை என்றால் அரசனை அவமதித்த குற்றமாயிற்றே !'' என்றான் இன்னொருவன். அவன் வருகைக்காகக் காத்திருந்தது விருந்தினர் கூட்டம்.

ஆயிற்று. நெடுநேரமாயிற்று. அவன் வரவில்லை. ஆனால் செய்திமட்டும் வந்தது. விஷயம் வேறொன்றுமில்லை. இராஜப் பிரதிநிதி லூக்ஜீ யாதவராவ் தம் மகளை என் மகனுக்கு அளிப்பதாய் நேற்று வாக்களித்துவிட்டார். இனி சம்பந்தம் செய்யும் வரையில் 'வது'வின் வீட்டில் நான் சாப்பிடுவது சம்பிரதாய விரோதம் '' என்று.

லூக்ஜீயின் கண்கள் கனலைக் கக்கின. என்கீழ் வேலைசெய்யும் சேவகன் என் மகளைக்கொள்ள நினைப்பதா ! 'கொல்லேற்றின் மதலைதனைக் குழிமுயல் வேட்ப துண்டோ? இருக்கட்டும். இவனுக்கு நல்ல பாடம் கற்பிக்கிறேன்' என்று சீறினான்.

மாலோஜி சிறந்த வீரன். லூக்ஜீ தன்னை தன் கீழ்வேலை செய்யும் பணிமகன் என்று இகழ்ந்த செய்தி அவனை வெகுளச்செய்தது. ''ஓகோ ! இன்று இவன் கீழ் வந்துவிட்டேனென்றல்லவா ஏசுகிறான். கையுண்டு, வாளுண்டு. எங்கே இருந்தாலென்ன? இருந்தாலும் ஒருநாளில்லாவிட்டால் ஒருநாள் இவன் கர்வத்தை ஒடுக்கி இவன் மகளை என் மருமகளாக ஆக்கிக் கொள்ளாவிடில் நான் மகாராஷ்ட்ரனல்ல'' என்று பலரறியச் சபதம் செய்தான்.

* * * *

ஆம் ! வருஷங்கள் ஐந்து ஓடிமறைந்தன, ஜீஜிபாய் அப்பொழுதே யௌவனம் என்கிற பூஞ்சோலையிலே அடி எடுத்து வைத்திருந்தாள். மாலோஜி தானே ஒரு படையைத்திரட்டி அதற்குத் தலைவனாயிருக்கிறனென்பதையும், பெரும் புதையல் ஒன்று கிடைத்து அதன்பயனாக அஹமத்நகர் சுல்தானிடம், தன் தந்தையைப்போன்ற ஒரு பெரும் பதவிக்கு வந்துவிட்டானென்பதையும் எவர்களாவது வந்து சொல்லுவார்கள். இவர்களைப்பற்றிய செய்திகளைக் கேட்கும்பொழுதெல்லாம் அவளையறியாமலே அவள் மனம் அழகிய சிறுவன் ஷாஜீயை நினைக்கும். அவன் இப்பொழுது எப்படியிருப்பான். எத்தகைய பேரழகுவாய்ந்த வீரனாயிருப்பான் என்பதை நினைக்குந்தோறும், சிறு புன்னகையால் அவள் முகம் மலரும்.

''அடாடா ! அந்த மாலோஜிக்குத்தான் என்ன தைரியம் ! ஒரு க்ஷணத்திலே இந்தச் சேவகம் துச்சமென்று உதறிவிட்டாரே, அதுவல்லவா வீரனது லக்ஷணம். ஆம் ! மகனும் தந்தையைப்போல் சிறந்த வீரனாகத்தானிருக்கவேண்டும் ! ஆம் ! இவைகளெல்லாம் சரிதான், அப்பாவுக்கு மாலோஜியைக் கண்டால் கசக்கிப் பிழிந்துவிடவேணும் என்ற எண்ணமாயிற்றே, என்னை அவருக்குக் கொடுக்க உடன்படுவாரா ?'' என்று நினைத்துப் பெருமூச்செறிவாள். நாட்கள் செல்லச் செல்ல, எப்படியாவது ஒரு முறை ஷாஜீயைக் காணவேண்டும், அவனது இனிய சொற்களைக் கேட்கவேண்டும் என்ற ஆவல் வளரலாயிற்று.

* * * *

பங்குனிமாதம். நல்ல வஸந்த காலம். திடீரென்று வந்த ஒரு செய்தி அவளைமட்டுமா? அல்ல, எல்லோரையுமே திடுக்கிடச் செய்தது. மாலோஜி

ஜயபாலன் என்பவனைத் துணைகொண்டு லூக்ஜீயோடு எதிர்க்கப்போகிறான் என்ற செய்திதான் அது; லூக்ஜீ நடுநடுங்கிப் போனான். அந்தப் பரதைப்பயல் நமக்கு சமதையாய் வந்ததோடு நில்லாமல் நம்மையே எதிர்க்கத் துணிந்துவிட்டானே. சேனைகளோ அபரிமிதமாய்ச் சேர்த்துவிட்டானும். இவனுடன் சண்டை செய்வதைவிட சுல்தானிடம் முறையிடுவதே சிலாக்கியம் என்று நினைத்தான்.

அஹமத்நகர் சுல்தான் சிறந்த புத்தி வன்மையுள்ளவன். பிரித்தாளும் தந்திரத்தில் தற்கால ராஜதந்திரிகள்கூட அவனிடம் பிச்சை வாங்கவேண்டும். இந்த சந்தர்ப்பத்தை அவன் தனக்கு அனுகூலமாக்கிக்கொண்டு இருவரையும் அழைத்து சமாதானம் செய்வித்து ஜீஜீயை ஷாஜிக்கு மணமுடிக்கும்படி ஏற்பாடு செய்துவிட்டான். சணப்பன்வீட்டுக் கோழிபோல், வேறு வழியின்றி ஒப்புக்கொண்டான் லூக்ஜீ.

உலகத்திலே நாட்கள் செல்லச் செல்ல கோபதாபங்களும், துயரமும் குறைவது சகஜம். ஆனால் சிலர் விஷயத்திலே, பகைமை மேல் மேலும் வளர்ந்து விடும். லூக்ஜீயின் தன்மை இத்தகையதே. அவன் நெஞ்சிலே பகைமை புகைந்துகொண்டே இருந்தது. செல்வக்குழந்தை ஜீஜி தன் கணவனைப்பற்றிப் பெருமை பேசும்பொழுதெல்லாம், அவன் நெஞ்சிலே கனல்மூண்டுஎழும். முகம் சிவக்கும். ஜீஜீ தந்தையின் மனநிலையைக்கண்டு மனதுள் சிரித்துக்கொள்வாள்.

நாட்கள் இன்பகரமாகவே கழிந்தன. ஆனால் ஜீஜீயின் மனம் இத்தகைய வாழ்க்கையினால் திருப்தி அடையவில்லை, கண்ணின் கருமணிபோற் காத்தான் ஷாஜீ, ஆனால்—? அவள் மற்ற சாமானியப் பெண்களைப்போல, வெறும் இன்ப மயமான வாழ்வை விரும்பினளா? இல்லை. நாட்கள் செல்லச் செல்ல, அவள் தன் காதலன் தான் நினைத்ததுபோல், அவ்வளவு சிறந்த வீரனன்று. லக்ஷியத்தின் பொருட்டு உயிரையே பணயம் வைக்கக்கூட மன உறுதி உள்ளவன் அன்று என்பது அவளுக்கு விளங்கிவிட்டது. ஏன்! அவன் ஷாஜஹான் பாதுஷாவின் கீழ் ஒரு தளகர்த்தனயிருக்க உடன்பட்டுவிட்டான். இந்த நிலை அவள் மனதைப் பெரிதும் புண்ணக்கிற்று.

தன் கணவன் ஒரு சுதந்திர வீரனக, ஒரு புதிய மகாராஷ்ட்ர ஸாம்ராஜ்யத்தையே ஸ்தாபிக்க வல்லவனய்ப் பிறர்மெச்ச வாழவேண்டுமென்ற ஆவல் அவள் மனத்துள் ஊறிக்கிடந்தது. பிறரது படையெடுப்பினல் நாட்டிலே நேரிடும் துன்பங்களைப்பற்றியும் அவர்களை அடியோடு நசுக்கி பாரத நாட்டை சுதந்திர நாடாக ஆக்கிவிடவேண்டுமென்பதைப்பற்றியும், தன் தந்தை ஆமத்நகர் சுல்தானிடம் கைகட்டிச்சேவகம் செய்யும் இழிவைப்பற்றியும் அடிக்கடி இடித்துச் சொல்லுவாள். இத்தகைய பேச்சுக்கள் வரும்பொழுது இடையே எழுந்து நின்று "பவித்ர பாரதத்தாய் தன் கைத்தளைகளை நீக்க சுதந்திர வீரனது முகத்தைத்தான் எதிர்நோக்கி ஏங்கிநிற்கிருள். அவள் குழந்தைகளது இன்னல்களை நீக்க ஒரு வீரமைந்தன் எழுந்து நிமிர்ந்து நிற்கவேணும். கேவலம் மொகல் பாதுஷாவிடம் கைகட்டி நிற்பதும் அவன் காலால் இட்டதை தலையால் செய்வதும் வீரன் செய்யக்கூடிய செயலா? அதைக்காட்டிலும் நீசத்தனம் வேறில்லை. அப்படிச் சேவித்து வாழ்வதைவிட, வாளை வீசி எறிந்துவிட்டு உழுது பயிரிட்டு ஜீவிக்கலாம்" என்று கர்ஜிப்பாள் அவள். வேறென்றும் பேச வாய் இழந்தவனய் அவள் பேசுவதைத் திறந்தவாயுடன் கேட்டுக்கொண்டிருப்பான் அவன்.

சுபாவத்திலேயே ஷாஜி சுகவாசி. ஆனந்தமான சாப்பாடு. இதர விஷயங்கள், சுகமாய் மாளிகைவாசம், இவைகளை விரும்பியது அவன் உள்ளம். ஆகவே ஜீஜியின் சொல்லை மீறி அவன் ஷாஜஹானிடம் சென்றதில் ஆச்சரியமென்ன?

* * * *

அன்று பூர்ணிமை. லூக்ஜீ தன்னந்தனியனய் மேல் மாடத்தில் உட்கார்ந்திருந்தான். அவன் சிந்தனைகள் நெடுந்தூரம் சென்று கொண்டிருந்தன. ஷாஜியின் புகழுக்குரிய செயல்கள் அவன் நெஞ்சை வாள் கொண்டு அறுப்பது

போல் அறுத்தன. பாதுஷாவினிடம் சென்றதும், அங்கிருந்து அஹமத்நகர் சுல்தான் மனைவியிடம் பெரிய பதவி பெற்று வாழ்வதும், ஒவ்வொன்றும் அவன் மனக்கண்களின் முன்பு தோன்ற அவன் நெஞ்சு குமுறலாயிற்று.

"என் எதிரிலே பிறந்து வளர்ந்த சிறு பயல், இன்று இராணியின் தயவு பெற்று என்னைவிட மேல் அதிகாரியாவதா? சீ! சீ!! இதென்ன வாழ்க்கை! முள்ளை முள்ளாலேதான் எடுக்கவேணும். மாப்பிள்ளையானால் என்ன? மச்சானானால் என்ன? பகதூர்ஷாவின் தலை எப்பொழுது சாயும் என்று காத்திருந்தவன்போலல்லவா உடனே ஓடிவந்துவிட்டான். நல்ல கெட்டிக்காரன்! ஷாஜஹான்பாதுஷா இவனை ஏன் விட்டுவிட்டாரோ! இவனே உதறிவிட்டு ஓடிவந்ததாகத்தான் வதந்தி. இருக்கட்டும்! அந்தப் பாதுஷாவைக்கொண்டே இவனை மடக்குகிறேன்" என்று வாய்விட்டுச் சொல்லிக்கொண்டான். அதேசமயத்தில் அங்கே வந்து நின்றாள் அவன் மனைவி ஜவஹர்பாய்.

அவள் கொணர்ந்த செய்தி அவனைச் சந்தோஷத்தில் ஆழ்த்தியது. விஷயம் வேறொன்றுமில்லை. மீர்ஜூமலாவின் தலைமையில் அறுபதினாயிரம் வீரர்கள் வந்துவிட்டார்களென்றும், நர்மதையின் கரையோரம் பாடி வீடென்றும் வெகு இரகசியமாக ஒற்றர்கள் தெரிவித்தார்களாம். ஆம்! உதவி வந்துவிட்டது. அவன் அகமும் முகமும் ஒருங்கே மலர்ந்தன. கண்களில் வெற்றியின் பெருமிதம் தோன்றிற்று. இத்தகைய துரோகி ஒருவன் துணை வேண்டுமென்றுதானே ஷாஜஹான் காத்திருந்தான். உடனே இவனுக்கு உதவி அனுப்பியதில் ஆச்சர்யமென்ன?

* * * *

மிகவும் பயங்கரமான யுத்தம். ஷாஜீக்குப் பகைவனது பலமும் உதவி வந்திருப்பதும் தெரியும், இருந்தாலும் படையெடுத்து வந்தபிறகு எதிர்த்தே தீர வேண்டுமல்லவா! குடிகளைத் தன்கீழுள்ள 'கல்யாணகட்' என்கிற கோட்டையில் பத்திரப்படுத்திவிட்டு, தான் மட்டும் சேனைகளோடு மண்டலீகட் என்கிற கோட்டையிலிருந்து போர்புரியலானான்.

இடைஇடையே அவன் உற்சாகம் குன்றிச் சோர்ந்துபோகும் வேளைகளில் "அன்பே! வீரன் ஒருமுறை வாளை எடுத்துவிட்டால் பிறகு தணிப்பதில்லை. பகைவன் மாமனாராயிற்றே என்று கூசவேண்டாம். போர்க்களத்தில் அண்ணன் ஏது? தம்பி ஏது? மாமனானால் என்ன? மைத்துனனானால் என்ன? அங்கே பவித்ரமான போர்க்களத்திலே, கடமை ஒன்றுதான் எஞ்சி நிற்கும். இந்த யுத்தம் மகாராஷ்ட்ர சாம்ராஜ்யத்தை ஸ்தாபிப்பதற்காயிருந்தால் இன்னும் எவ்வளவோ மேன்மை. ஆனால் இன்று ஆமத்நகர் பேகத்தின் உப்பைத் தின்றதன்பொருட்டு வாளேந்தி நிற்கிறீர்கள். பீஷ்மர் துரோணர் முதலியவர்கள்போல நீங்களும் செஞ்சோற்றுக் கடனைக் கழிக்கவேண்டியதுதான். ஆனால் இந்த யுத்தம் முடிந்தபிறகு "பிறரிடம் கைகட்டி சேவகம் செய்வதில்லை. சுதந்திர சாம்ராஜ்யத்திற்காகவன்றி வேறு எதற்கும் வாளைத் தொடுவதில்லை" என்று உறுதிகொள்ளுங்கள்" என்று உற்சாகமூட்டுவாள். அவளது வீரமொழிகள் கோழையான அவன் மனதையும் மாற்றும். இந்த நிலையில் தொடர்ந்து ஆறுமாதங்கள் யுத்தம் நீடித்தது.

* * * *

நடுநிசி. அடர்ந்த காடு. குதிரையின்மேல் இருவர் வருகிறார்களே இவர்கள் யார்? வேறுயாருமல்ல. ஷாஜியும் ஜீஜியும்தான். அவள் கருவுற்றிருந்ததனால் மெலிந்திருந்த அவள் பெருமூச்சுடன் குதிரையின்மேல் சாய்ந்திருந்தாள். இந்த நடுநிசியில் இவர்கள் ஏன் இங்கு வரவேண்டும்? இது உள்ளூறப் பொங்கி எழுந்த பகைமையினால் நேரிட்ட யுத்தம். ஆகவே, தங்கள் இருவரது நன்மையின் பொருட்டு குடிகள் கஷ்டப்பட்டு மடிவதையும், நகரம் சூறையாடப்படுவதையும், அவள் விரும்பவில்லை. ஆகவே இரவுக்கிரவே வெளியேறிவிட்டார்கள்.

ஆயிற்று. இன்னும் சில குரோசங்கள் தாண்டிவிட்டால் பிறகு பீஜப்பூர் எல்லை. கிழக்கு வெளுக்கவில்லை. ஆனால் எங்கேயோ குதிரைகளின் குளம்பொலி கேட்டது. ஜீஜியின் முகத்தில் கவலைக்குறி தோன்றிற்று. "அன்பே! பகைவர் நெருங்கிவிட்டார். இந்த நிலையில் இனி என்னால் குதிரையின்மேல் வருவது இயலாது, உடல் தளர்ந்துவிட்டது. வழியிலேயே பிரசவிக்க நேர்ந்தாலும் நேரலாம். நீங்கள் மட்டும் ஓடித்தப்புங்கள். என்னை நானே காப்பாற்றிக்கொள்ளுவேன். ஓடுங்கள்! சீக்கிரம்! சீக்கிரம்!" என்றாள்.

ஷாஜிக்கும் இதுவும் நல்லதென்றே தோன்றிற்று. "ஏழுமாத கர்ப்பிணி, உன்னைத் தனியேவிடுத்து, நான் போவதா? வந்தது வரட்டும் ஒருகை பார்க்கிறேன்" என்று சொல்வதற்குவேண்டிய மனநிலை அவனுக்கு இல்லை. தலை தப்பியது தம்பிரான்புண்ணியமென்று ஓட்டம் பிடித்தான் ஷாஜீ.

கணவன் அவ்வளவு சுலபமாக ஒப்புக்கொண்டது அவள் மனதைப் பெரிதும் புண்படுத்திற்று. இரண்டொரு வார்த்தைகள் விவாதித்துப் பின் போகக் கூடுமென்று எண்ணினாள் அவள். மறுவினாடி படபடவென்று குதிரைகளின் காலடிச்சத்தம் வெகு சமீபத்தில் கேட்டது. கோபவெறிக்கொண்ட கண்களுடன் அவள் எதிரில் குதிரையினின்றும் குதித்தான் லாக்ஜீ.

"அவன் எங்கே? என்று அவன் அதட்டிய குரல் அந்த வனப்பிரதேசம் முழுதும் எதிரொலித்தது.

அவள் குனிந்த தலை நிமிரவேயில்லை.

"சொல்லுகிறாயா இல்லையா!

பதிலில்லை.

"நீ பெண்ணல்ல, பேய். பெற்றவனிடமே கற்ற வித்தையைக் காட்டுகிறாயா? எங்கே அவன்!"

அதற்கும் அவள் அசையாது, "ஏன் போர் செய்வதானால் வாளை எடுங்கள்"

"மகாராஷ்ட்ரன் பெண்களுடன் போர் செய்ததில்லை."

"ஓகோ! அப்படியா?"

இவளது அலக்ஷ்யமான சொற்கள் எரிகிற தீயை ஏறத்தள்ளின. இருந்தாலும் மீண்டும் அதே இடிக்குரலில், "சொல்லுகிறாயா? இல்லையா? பிறகு நீ என்னசொன்னாலும் பிரயோசனமில்லை. கடுந்தண்டனைக்கு ஆளாக நேரிடும்" என்றான். கோப மிகுதியினால் அவன் உதடுகளும் மீசையும் துடித்தன. அவள் மிகவும் அமைதியான குரலில் "எங்கே போயிருப்பாரென்று எனக்குத் தெரியாது"

"ஓகோ! நீ போய்விடு. என் தகப்பன்தானே. நான் ஏதாவது சாகஸம் செய்துவந்துவிடுகிறேன் என்று அனுப்பினாயோ? அந்த ஏமாற்றுக்கெல்லாம் அசைகிறவன் லாக்ஜீயல்ல" என்று சீறினான். மறுவினாடி அவன் கையிலிருந்த பெரிய இரும்பு விலங்குகள் கர்ப்பிணியான அவளது மலர்க் கைகளிற் பூட்டப்பட்டன.

* * * *

இருள் சூழ்ந்த சிறை. கரடுமுரடான கருங்கற் சுவர்கள். வௌவால்களின் நாற்றம். அதன் நடுவில் வைக்கோல் படுக்கை. ஒரு மூலையிலே மண்மடக்கு ஒரு மண் கூஜாவிலே தண்ணீர். இதைத் தவிர மூலையிலுள்ள சிறு மாடம் ஒன்றில் 'முணுக் முணுக்' என்று எரியும் அகல் விளக்கு. இவைகள் புடைசூழ, வைக்கோலின்மேல் படுத்துக்கிடந்தாள் அந்த வீரப்பெண். இறந்த கால நிகழ்ச்சிகள் ஒவ்வொன்றாய் இறகு முளைத்து எதிரே வந்தன. இளமையில் தாயுடன் சிவாலயத்திற்குச் சென்றதும் அங்கே வந்திருந்த ஒரு கோஸாயி, 'இவள் ஒரு சிறந்த வீரனைப் பெறுவாள்' என்று சொன்னவைகளும் நினைவிற்கு வர அவளையும் மீறி அவள் கண்களிலே கண்ணீர் துளித்து நின்றது.

'வீரன் ஒருவேளை கண்ணன் பிறந்ததுபோலச் சிறையில்தான் பிறப்பானோ? எங்கே பிறந்தாலென்ன? வீரன் சுதந்திர வீரனாக, வணங்காமுடி மன்னனாக, தெய்வத்திற்கன்றி வேறொருவருக்கும் வணங்காத வீரனாக வாழ

ஸ்ரீமதி எம். எஸ். கமலா

# "அந்த இரு கண்கள்"

கிருஷ்ணமூர்த்தி ஆபீஸறையில் மேஜையருகில் வீற்று பென்ஸிலை உதட்டின் நுனியில் வைத்துக் கடித்தவாறு கண்களை மூடியபடியே ஏதோ சிந்தித்துக் கொண்டிருந்தான். அவன்முன் புகைப்படத்தைப்போல் கடந்த நாட்களின் நினைவுகள் ஒவ்வொன்ருய் முன்வந்து நின்று மறைந்துகொண்டிருந்தன. அவன் முகத்தில் துன்பக்கிறல் கிறப்பட்டு மூன்று வருடத்திற்கு மேலாகிவிட்டது. அவனை இன்பவாரிதியில் ஆழ்த்த அவன் தாய் பிரயத்தனம் செய்தாள்.

கூடத்தில் ஓர் அழகுள்ள பெண் வந்து காத்திருந்தாள். அவன் வீடு கல்யாண வீடுபோல் போவோரும் வருவோருமாய் இருந்தார்கள். அல்லு அசலு பெண்கள் வந்து "மங்கா! பெண் நன்ரு அழகா இருக்காடீ இந்தவருஷம் 'கிட்டு'க்கு கல்யாணம் செய்துவிடு. இப்படி இருக்காதே அவன் அனியாயமாய் வேதனைபிடித்து ஒன்றுக்குமாகாமல் போய்விட்டான்" என்று சொல்லிச் சென்ருர்கள்.

* * * *

மாலை ஐந்து மணி சுமார். வாயிற்புற அறையில் தெருவிற்கெதிரில் இருக்கும் நிலைக்கண்ணுடிக் கருகில் நின்று, முன்புறம் முகத்தில் விழும் கூந்தலை அழகாய் வளைத்துவிட்டுக்கொண்டிருந்தாள். அவள் வாய் முணு முணுத்தது.

**சொல்லவல்லாயோ கிளியே நீ சொல்லவல்லாயோ"**

அச்சமயம் ஆபீஸிலிருந்து வந்த கிருஷ்ணமூர்த்தி இதைப் பார்த்ததும் வெருண்டான், 'ஏன்?' எதிர்வீட்டு வாசற்படியில் யாரோ ஓர் புதிய ஆடவன் இவளை அதி வியப்புடன் பார்த்துக்கொண்டு நின்றிருந்தான். இதைப் பார்த்ததும் கிருஷ்ணமூர்த்தியின் மனம் பிளந்துவிடும்போலாயிற்று. கடுகடுப்புடன் உள் நுழைந்து, பேசாமல் சேரில் சாய்ந்து தன்னுள் தானே தர்க்கத்திலாழ்ந்தான். பார்வதி கொடுத்த காபியைப் பருகாமல் அவளை சுட்டுவிடுபவன்போல் பார்த்தான். அவள் சற்று பயத்துடன் "ஏன்? உடம்பிற்கு என்ன?" என்று கேட்டாள்.

"நீ இருப்பதைவிட செத்தால்கூட...எத்தனை நாளாய் இந்த வியாபாரம்?"

அவள் அப்படியே திகைத்து நின்ருள். அவன் அதன் பிறகு பேசாததால் அவனுக்கு ஆபீஸில் ஏதோ சொல்லமுடியாத தொல்லை என்று நினைத்து அதி வேகமாய் அவனுக்கு விருப்பமுள்ள சமையலைச் செய்தாள். அவன் எழுந்து வரவில்லை. அவன் அருகில் சென்று கூப்பிடவும் பயம். பார்வதி செய்த சமையல் ஆறுவதைப்பார்த்துப் பொறுமினுள். தட்டை அலம்பிவைத்தாள். வைத்த தட்டின் மேல் தூசி படர்ந்துவிட்டது. இனி அவளால் பொறுக்கமுடியவில்லை. எழுந்து அவன் படுத்திருக்கும் அறைக்குச் சென்ருள். அவன் இவள் வந்ததை யறிந்து தூங்குபவன்போல் பாசாங்கு செய்தான். அவனுக்கு மனது சரியாயில்லை; வேதனையுடன் படுத்திருந்தான். அவன்மாத்திரம் கண்களைத்திறந்து அவளைப் பார்த்திருந்தால் தன்னுடைய வேதனையையும் மறந்து அவளை மன்னிப்புக் கோருவான். உண்மையில் **'பார்வதி'** அப்பேர்ப்பட்ட சமர்த்து. அவளுக்கு நிகர் அவளேதான்.

சற்றுநேரம் நின்ருள். துக்கம் பீறிக்கொண்டுவந்தது. அவன் காலருகில் உட்கார்ந்திருந்து அதை வருடிக்கொண்டிருந்தாள். அவன் அதை அறியாதவன் போல் படுத்திருந்தான். அவள் என்ன செய்வாள்! சற்று நேரம் யோசனை செய்தாள். அவ்வறையில் ஒருபுறமாய் படுத்தாள். துக்கத்தின் சோர்வு தூக்கத்தில் கொண்டமுத்தியது. தூங்கிவிட்டாள். எந்நேரம் தூங்கினளோ தெரியாது. தட்டி எழுப்பியதைப்போல் எழுந்தாள்.

அவள் கணவன் எங்கோ போவதற்குத் தயாராய் உடுத்தியிருந்தான். அவள் எழுந்து வெளிவருவதற்கும், அவன் வீட்டைவிட்டு இறங்குவதற்கும் சரி

யாயிருந்தது. சற்றுநேரம் திகைத்து நின்ருள். மறுபடியும் உள்ளே சென்று தன்வேலையிலிறங்கினுள். வீட்டுக்காரக்கிழவி கண்ணீருடன் வேலைசெய்யும் பார்வதியைப் பார்த்து 'பார்வதி! ஏன் ஒருமாதிரி இருக்கே!''

கிழவிகேட்டதும் அடக்கிக்கொண்டிருந்த வேதனை உடைத்துக்கொண்டுமேல் வந்தது. கண்ணீர் மடமடவென்று வழிந்தது. வாயைத்திறந்து சொல்ல மனம் வரவில்லை. "பாட்டி! மண்டை இடி பொறுக்கவில்லை.'' என்று சோர்ந்த குரலுடன் சொல்லி தன்னறைக்குச் சென்று கதவைத் தாளிட்டுக்கொண்டாள்: அவள் மனம் பொறுமி அழுதாள். அழுது அழுது அடங்கினுள், அவள் குமுறலும் அடங்கிற்று. ஆதவனும் அடங்கி தன்னில்லம் நோக்கிச் சென்ருன். மறுபடியும் மாலை உணவை அதிசிரத்தையுடன் தயாரித்தாள். காலைசென்ற அவள் கணவன் வரவில்லை. செய்துவைத்த உணவுப் பொருள் புகையடங்கி ஆறிவிட்டது. ஆனல் இவள் மனது புகைந்து கொந்தளித்து கொதிக்க ஆரம்பித்தது. கிருஷ்ணமூர்த்தியைப்போல் மனைவியிடம் அன்பாயிருந்தவர்களே இல்லை. இன்று அவனைப்போல் வெறுப்புடன் வெளிச்சென்றவன் யாருமில்லை. இரவு வெகு நேரத்திற்குப்பின் கிருஷ்ணமூர்த்தி வீட்டிற்கு வந்தான். பார்வதி உடைகளைக்கழட்ட அவன் அருகில் சென்ருள். அவன் முகத்தை சுளித்துக்கொண்டு தானே கழட்டி எறிந்தான்.

* * * *

சந்தோஷத்திற்கு முடிவு துக்கம். கஷ்டத்திற்கு முடிவு சுகம். சுகத்திற்கு முடிவு...அப்படியே பார்வதியின் துக்கத்திற்கும் முடிவு ஏற்பட்டது. கோபம் பீறிக்கொண்டுவந்தது. "ஏன் காரணமில்லாமல் கோபித்துக்கொண்டு என்னை கோபித்துக்கொள்ளுகிறீர்கள்? நான் செய்த தவறென்ன?''

"என்னவா! போடி தேவடியாளே?'' என்று இரைந்து கூவிவிட்டுச் சென்ருன். அவள் அங்கம் ஆயிரம் கத்திகளால் அறுக்கப்படுவதைப் போன்றிருந்தது. அப்படியே அயர்ந்து நின்ருள். தான் செய்த தப்பிதமான செய்கை என்ன? என்றுயோசனை செய்தாள். கண்ணீர்வடியக் கதறினுள். முகம் சோர்ந்தது. இன்பமுடன் நடந்த குடும்ப வாழ்க்கை துன்பமுடன் துடிக்கத்துடங்கிவிட்டது.

* * * *

சதிபதிகளிடை மனவேற்றுமை ஏற்பட்டு நான்குநாட்களாகிவிட்டன. அன்று மத்தியானம் பார்வதி கவலையுடன் படுத்திருந்தாள். வீட்டுக்காரக்கிழவி ஓர் கடிதத்தைக் கொண்டுவந்து அவளிடம் கொடுத்துச் சென்ருள். பார்வதியின் சகோதரிக்கு விவாகமாதலால் தன் கணவனுடன் புறப்பட்டு வரவேண்டுமென்று அவள் தந்தையிடமிருந்து வந்திருந்தது. "உம். இந்த லக்ஷணத்தில் கல்யாணம் தான் பாக்கி'' என்று அவள் வாய் முணுமுணுத்தது.

மாலை கிருஷ்ணமூர்த்தி வந்ததும் கடிதத்தைக் கொடுத்தாள். அதைப் படித்ததும் அவன் மனம் சற்று ஆறுதலடைந்தது. அவன் அகங்காரத்தை அடக்கிக் கொண்டு சாந்தமுள்ளவனுய், "பார்வதி! இன்று இரவு வண்டிக்கே போகலாம் புறப்படு'' என்ருன்.

"நான் கல்யாணத்திற்கும் வரவில்லை; கார்த்திகைக்கும் வரவில்லை'' என்று சொல்லிக்கொண்டே அடுக்கறையில் நுழைந்தாள்.

எப்படியோ கல்யாணத்தன்று காலை பார்வதியை அழைத்துச் சென்றுவிட்டு அன்று இரவே புறப்பட்டு வந்துவிட்டான். பார்வதி பிறந்தகம் வந்து இரண்டு மாதங்களுக்கு மேலாகிவிட்டது. கிருஷ்ணமூர்த்தியிடமிருந்து கடிதமே இல்லை. ஐந்து நிமிஷம் பார்வதியில்லாமல் இருக்கச் சகியாத கிருஷ்ணமூர்த்தி கடிதம்கூட போடாமலிருப்பதைப் பார்த்து அவள் தாய்தந்தையர் அத் தம்பதிகளிடம் ஏதோ ஏற்றத்தாழ்வு ஏற்பட்டதாய் நினைத்தார்கள். நாளுக்குநாள் பார்வதி பார்க்கப் பரிதாபமாய் இளைத்துத் துரும்பாய் படுக்கையில் வீழ்ந்தாள். டாக்டர்கள் பார்த்தார்கள். அவள் ஏக்கம் அவர்களுக்குத் தெரியவில்லை. எலும்புருக்கி' 'T. B.' என்ருர்கள். அதன்பேர் சொன்னலும் பிழைப்பவர்கள் உண்டா?

கிருஷ்ணமூர்த்தியோ பார்வதியை விட்டு வந்த நாள்முதல் மனோ வேதனையுடன் சங்கடப்பட்டுக்கொண்டு திரியலானான். அவன் பார்வதியை நினைக்கும்போது அவன் கண்முன் வந்து நிற்கும் சித்திரம், நிலைக்கண்ணாடிமுன் கூந்தலை சரிச்செய்து கொள்ளும் பார்வதி; அதை எதிர் வீட்டு வாயிலில் நின்று பார்க்கும் யுவன். இயற்கையாய் பார்வதியிடம் அன்பு சுறந்தாலும் அவன் மனதைச் சிதைக்கும் வேதனைச் சித்திரம்போல் அது அவன்முன் வந்து நிற்கும்.

* * * *

அன்று ஞாயிற்றுக்கிழமை. கிருஷ்ணமூர்த்தி பார்வதியை நினைத்தவாறு வீற்றிருந்தான். அருகில் "ஜவஹர் ஜீவிய சரித்திரம்" காற்றுக்கு படபடவென் றடித்துக்கொண்டு பக்கங்கள் மாறிக்கொண்டிருந்தது இவன் மனம்போல். அச்சமயம் மற்றோர் ஆடவன் வந்து "குட்மார்னிங் மிஸ்டர்" என்றான். யோசனையிலிருந்த கிருஷ்ணமூர்த்தி, வேற்றுக் குரலைக்கேட்டு திடுக்கிட்டுப் பார்த்தான். வந்தவனைப் பார்த்ததும் வயிற்றெரிச்சல் கிளம்பியது. கோபம் பீறிக்கொண்டு வந்தது. அதை யடக்கிக்கொண்டு நடுங்கும் குரலில் "யார்?" என்று கேட்டான்.

வந்தவன் "பார்வதி இல்லையா? அவளைப் பார்க்கவந்தேன்" என்று இனிய குரலில்கேட்டு அந்த கண்ணாடியைப் பார்த்தான். அதில் இவனுடைய ஏங்கிய பிம்பம்தான் தெரிந்தது.

கிருஷ்ணமூர்த்தியின் ரத்தம் கொதிப்பெடுத்தது. முகம் கறுத்தது. "இவன் தைரியம் என்ன? என்னையே வந்து 'பார்வதி, எங்கே!' என்று கேட்கிறானே!" என்று அவன் முகத்தை வெறிக்கப் பார்த்தான். அவன் முகத்தில் ஆவலோ துடிதுடிப்போ ஒன்றுமில்லை. இவன் மனது எத்தனை வேதனையுடன் துடிக்கிறதோ, அவன் மனது அத்தனை சாந்தியுடனிருக்கிறது. "வெட்கம் மானம் விட்டவனுக்கு உள்ளத்துடிப்பேது?" என்று நினைத்தான் கிருஷ்ணமூர்த்தி. அவனுக்கு பதில்சொல்ல வாய்வரவில்லை.

வந்தவன் "பார்வதிக்கு உடம்பிற்கேதாவது...என்று இழுத்தாற்போல் கேட்டுக்கொண்டிருக்கும்போது, சேவகன் ஓர் தந்தியைக் கொடுத்தான். அதில் "பார்வதி மிக்க அபாய நிலையில் இருக்கிறாள். உடனே புறப்பட்டுவரவும்."

"அப்பா! பிடித்த பிடை துலைத்தது. ஒரு முழுக்கு போட்டுவிட்டு இருக்கிறேன்" என்று அல்லல்படும் நெஞ்சு, அமைதியுடன் சொல்லிற்று. அடுத்த க்ஷணம் தான் அவளுடன் இன்பமாய் தன்னை மறந்து சுகத்திலாழ்ந்தது நினைவிற்கு வந்தது.

வந்தவனோவெனில் கிருஷ்ணமூர்த்தி தன்னை உலக மரியாதைப்படி நடத்தாத தற்கு தலைகுனிந்து வேதனையுடன் நிற்கும்போது, தந்தி வந்ததும், தந்தி வந்த பின்னும் ஒன்றும் பேசாமல் சாந்தியுடன் வீற்றிருப்பதைப் பார்த்ததும் "நான் வந்த சமயம் சரியில்லைபோல் தோன்றுகிறது. நான் பிறகொருமுறைவருகிறேன்' என்று சொல்லி போகப் புறப்பட்டவன் மேஜையின்மீதிருந்த தந்தியை பார்த்ததும், தன்னிலை மறந்து 'பார்வதி!' என்று கூவி சரசரவென்று அவ்விடத்தை விட்டகன்றான்.

இரண்டு நாட்களுக்குப்பின் திருச்சி ஆண்டார் தெருவில் ஓர் வீட்டிற்குள் ஒவ்வொருவராய் போய்க்கொண்டும் வந்துகொண்டுமிருக்கிறார்கள். அவ்வீட்டு வாயிலில் சூனியமுகத்துடன் ஒருவர் நின்றுகொண்டு வருபவர்களை ஆவலுடன் உற்று உற்றுப் பார்த்துக்கொண்டிருந்தார். அச்சமயம் இளைத்துத் துரும்பாய் வேதனையுடன் வந்த கிருஷ்ணமூர்த்தியை அழைத்துக்கொண்டு அவர் உள் நுழைந்தார். அவனுக்கு அவரை ஒன்றும் கேட்க மனம் வரவில்லை. இவர்கள் உள் நுழைந்த சற்று நேரத்தில் நாம் முன் குறிப்பிட்ட ஆடவனும் நுழைந்தான்.

கூடத்தில் ஓர் கட்டிலில் எலும்புக்கூடாய் பார்வதி படுத்திருந்தாள். அவள் உலக வியவஹாரங்களின்மேல் பற்றே இல்லாமல் செடியைவிட்டு உதிர்ந்த உலர்ந்த சருகைப்போல் துவண்டு கிடந்தாள். கிருஷ்ணமூர்த்தியின் பிடிவாதமும் அகங்காரமும் இருந்த இடம் தெரியவில்லை. கண்ணீர் சோர அவளருகில்சென்று

'பார்வதி' என்று அவள் குச்சிகள் போன்ற உணர்ச்சியற்ற கைகளை மேலுக் கெடுத்தான். அவன் முத்துக்களைப்போன்ற கண்ணீர் அவள்முகத்தில் விழுந்தது. அவள் மெல்ல கண்களைத் திறந்து 'உங்களுக்கு... கோபம்... இல்லையே !' என்று கேட்டுக்கொண்டே கண்களை விரித்து மேல் நோக்கினள். இவர்களுக்குப் பின் நின்றவனைப் பார்த்ததும், 'ஹா ! நீ வந்துட்டையா ? என் நெஞ்சு ஈரல் தீர்ந்தது' என்று கேட்டவாறே புன்முறுவலுடன் கண்களை மூடினள். அவள் சொன்ன தைக் கேட்டு ஏக காலத்தில் திரும்பிப் பார்த்த கிருஷ்ணமூர்த்தியும், அவன் மாம ளுரும் திகைத்தனர். கிருஷ்ணமூர்த்தி அவனை ஓங்கி அறைய கையை தூக்கினன். அப்பொழுது அவர் "அடே வெங்கிட்டு ! இப்பவாவது வீட்டின்மேல் ஆசை தோன்றிற்றே ?" என்று கூவினர். "அந்த இருகண்கள் பார்வதியின் உலர்ந்த உடலையே உருக்கத்துடன் பார்த்துக்கொண்டிருந்தன. கிருஷ்ணமூர்த்தி அக் கண்களை பார்த்து வெறுப்புடன், அவன் பிடரியை பிடித்துக்கொண்டு "பாபி ! நீ யார் ? என் சுகத்தை கெடுத்த த்ரோகி !" என்ருன்.

அவன் கண்ணீர் வழிய "பார்வதி! உன்னுடன் பிறந்தும் நான் உனக்குத் த்ரோஹியா ?" என்று வாய்விட்டலறியதும், கிருஷ்ணமூர்த்தி கற்சிலைபோல் நின்ருன்.

பார்வதியின் விவாஹத்திற்கு முன்பே வேலையில்லாத்திண்டாட்டத்தில் சிக்கி சீரழிந்த அவள் மூத்த சகோதரன் ஒருவன் வீட்டைவிட்டு சென்றதாய் சொல்லி அவ்வப்பொழுது பார்வதி அவனுக்காக கண்ணீர்வடிப்பாள். அது அவனுக்கு அப்பொழுதுதான் நினைவிற்குவந்தது. அன்று தன்னல் நிராகரிக்கப்பட்ட பார் வதியின் இரு கண்களும், அவள் சகோதரனின் "அந்த இரு கண்களும்" அவனை எங்கோ இழுத்துச்சென்றன.

*　　　*　　　*　　　*

"ஏண்டா ! எத்தனை நேரம்டா வந்தவா உக்காந்திருப்பா ! எழுந்து வாடா ! பெண்ணெ பாத்துவிட்டுப்போ ! பிடித்தால் இன்னிக்கி எட்டாம்நாள் முகூர்த்தம்" என்ருள்.

கிருஷ்ணமூர்த்தி நடுங்கும் குரலில் தாகாப்புடன் "அம்மா ! எனக்குக் கல் யாணம் வேண்டாம்" என்று சொல்லி எழுந்து வெளியில் சென்ருன்.

# விகடவெடிகள்

## "விருச்சிகம்"

1. **தகப்பனர்:**—உங்கம்மா எங்கேடா !

**பையன்:**—யாரோ ஒருவர் நல்ல விஷயம் சொல்கிருராம்; அதைக் காதில் போட்டுக்கொண்டிருக்கிருளாம்.

**தகப்:**—அப்படியானல் வைர ஓலைக்கு காதில் இடமில்லை.

2. **கணவன்:**—அப்பாடா! தெருக்கோடியிலிருந்த ஜவுளிக்கடை தொலைந்தது பெரிய சந்தோஷமாயிற்று. ஊரைவிட்டுப் போயிருந்தால் இன்னும் ஆனந்தப் படுவேன்.

**மனைவி:**—இப்போதுகூட ஆனந்தப்படலாமே. சாதாரண மனிதர்கள் யாரும் குடிக்கூலி அதிகம் கொடுக்கமாட்டேன் என்ருர்கள். அதற்காக அந்த ஜவுளிக்கடைக்காரருக்கு நம்ம வீட்டிலேயே இடம் கொடுத்துவிட்டேன். வாட கையும் அதிகம் வருகிறது. நாளைக்கு சாமான்களுடன் வருவார்கள்.

3. **சங்கீதப்ரியர்:**—உமக்கு எத்தனை வர்ணங்கள் தெரியும் ?

**விடை:**—எனக்கா ! ப்ரம்ம, க்ஷத்ரிய, வைச்ய, சூத்திர...என்கிற நான்கு வர்ணங்களும், பச்சை சிகப்பு முதலிய நவ வர்ணங்களும் தெரியும்.

4. **குப்பன்:**—வேதாசலத்தின் பிள்ளைக்கு அருணசலத்தின் பெண்ணைக் கொடுத்தார்களாம். அதற்கு ப்ரகஸ்பதி சோணசலம் வந்திருந்து தணிகாசலத்தின் விவாகத்தை நடத்தினராம்.

**சுப்பன்:**—ஓகோ ! அதற்குத்தான் விருத்தாசலம், சேஷாசலம், சிம்மாசலம், கடிகாசலம் முதலியவர்கள் விருந்துக்குப் போனர்களா !

ஸ்ரீ. P. R. ராஜசூடாமணி.

## குழந்தையின் வளர்ச்சியில் தாயின் மகிழ்ச்சி.

பாப்பா வளரும் கதைபோல—இந்தப்
பாரில் எதையும் கேட்டறியேன்
கேட்க நினைக்க இன்பமடி—இதைக்
கேட்ட செவியில் தேன் ஊறும்.

காலும் கரமும் அசைத்தாட்டி—மலர்க்
கண்ணால் எதையும் பார்க்கின்றான்
பாலுண் குமுதச் செவ்விதழ்கள்—விள்ள
பரந்து சிரிக்கும் முகமலர்கள்.

காலும் கரமும் அசைத்தாட்டி—தண்டை
காப்பு கொலுசைப் பற்றுகிறான்
பாலுண் இதழ்வாய் முத்தாடி—எச்சில்
பற்ற என்னைத் தழுவுகிறான்.

குப்புற விழுந்தவன் நீந்துகிறான்—பிள்ளை
நீரினில் பிறந்த மீன்போல
இப்புவி வாழ்க்கை கடலென்றே—இவன்
இன்றே கடக்கப் பழகுகிறான்.

வாவென்றழைத்தால் தவழ்ந்திங்கே—வந்து
மடிமேல் இருந்து துள்ளுகிறான்
கூவும் மாங்குயில் இசைபோல—இவன்
கூறும் மழலை இன்பமடி.

அம்புலி மானதை வாவாவா—என்பான்
அன்புடன் திங்களை அழைக்கின்றான்
வம்புகள் செய்தவன் அம்புலியை—பற்றி
வந்துடன் தந்திட கேட்கின்றான்.

பேசிடும் வாய்தனில் சொல் பிறக்க—நிதம்
பேசியே தொல்லையும் செய்கின்றான்
மூசுவண் டினங்களும் கண்டிடுமோ—அவன்
முல்லைவாய் சிந்திடும் சொல்லமுதம்.

வெண்ணிறப் பல்லினை தோன்றிடவே—கடித்து
மென்றிட என் விரல் பற்றுகிறான்
தின்னவே பண்டமும் தந்திட என் —பட்டுச்
சேலையைப் பற்றி இழுத்திடுவான்.

காகமும் கோழியும் சிட்டுகளும்—கண்டு
காவெனக் கோவெனச் சொல்லுகிறான்
பாகுடன் கிண்ணியில் பால்சோறும்—தின்னப்
பக்கமே காகமும் வந்திடென்பான்.

வானிலே காகமும் சென்றிடவே—ஓடி
வந்திவன் நின்றதை கூவிடுவான்
நானதை ஊட்டவும் வேண்டிடுவான்—வந்த
நாயைத் தோவென அழைத்திடுவான்.

பிள்ளையைப் பெற்றவள் நெஞ்சகம்போல்—அன்பு
பெற்றவர் மண்ணினில் யாருமில்லை
துள்ளிடும் கன்றென இவன் வளர்ந்தால்
தோன்றுபேர் இன்பமும் மற்றுமுண்டோ?

# அநுபவ நீதிசாரம்

1. கல்யாண முகூர்த்தம் ஆகும் சமயத்தில் மட்டும் அங்குக் கூடியுள்ள ஒவ்வொருவருக்கும் ஒரு தெய்வீகமான உணர்ச்சி, மயிர்சிலிர்ப்பு, புலகிதம், முதலியவை உண்டாகி அந்த வேகம் முகத்தில் ஜ்வலிப்பதை ப்ரத்யக்ஷமாகப் பார்க்கிறோம். பெண்களுக்கு லக்ஷ்மீ கல்யாணம் பாடமுடியாது தொண்டை அடைக்க ஆனந்தம் பொங்குகிறது. அதே சமயத்தில் பலவிதமான உணர்ச்சிகளை அங்கு பார்க்கும்போது இந்த கல்யாணம் என்கிற சடங்கு முற்றிலும் தெய்வீகமானது, தெய்வத் தன்மையின் சாயல் மனிதரிடம் பிரதிபிம்பமாகிறது என்பதைக் கூறவேண்டுமா?

2. கல்யாணப்பிள்ளைக்கோ தனக்கு சகதர்மிணி வந்து இல்வாழ்க்கையின் இன்பத் தளையில் விழுந்துவிட்டோம் என்கிற பூரிப்பு பொங்கும் வேகத்தில் தாலியை முடியும்போது கைகள் நடுங்கி மந்திரம் சொல்ல நாக்கும் உளறுகிறது.

3. கல்யாணப்பெண்ணுக்கோ, நாம் இனி கணவனின் நிழல்போலாகி விட்டோம். உலகத்து உதாரண பெண்களைப்போல் நாமும் சதியாகி, பின் தாயாகி, இல்லத்து ராணியாகப்போகிறோம். குடும்பத்து வாழ்க்கையின் கட்டடத்தில் முதல் படிக்கட்டில் ஏறிவிட்டோம். என்கிற ஆனந்தம் உடல் முழுதும் பொங்குவதால் அவள் முகத்தின் சோபையே தனித்து விளங்குகிறது. ஆர்வத்துடன் கைகள் நடுங்க கணவனின் கைகளைப் பற்றுவதே ஒரு கண்கொள்ளாக் காக்ஷியாக இருக்கிறது.

4. பெண்ணின் பெற்றோருக்கு, அதிலும் தாயாருக்கு, தன்னருமைப் புதல்வியைப் பிரியவேண்டுமே என்கிற வருத்தம் மேகம்போல் படர்ந்து உலாவுகிறது. எனினும் அதையும் கீறிக் கிழித்துக்கொண்டு தன் பெண்ணை நல்ல கணவனிடம் ஒப்புவித்துவிட்ட சந்தோஷம் தாண்டவமாடுகிறது. இவ்விரண்டு உணர்ச்சிகளையும் பெற்றோர் பெண்ணை தாரைவார்க்கும் சமயம் வெகு தெளிவாகக் காண்கிறோம்.

5. பிள்ளையின் பெற்றோர்கள் தமக்குச்சரியான க்ருகலக்ஷ்மி வந்துவிட்டாள். தம் வீட்டு விளக்கை ஏற்றும் இளவரசி வந்துவிட்டாள். தாம் இனி மாமனார், மாமியார் பின்னர் பாட்டன், பாட்டியாகப்போகிறோம் என்கிற பெருமை அமோகமாக உலாவுகிறது. ஒரு சிலருக்கு அந்த பெருமையுடன் சீர்வகைகள் போதவில்லையே... என்கிற களங்கமும் ஊடே உலாவும். இருப்பினும் அந்த முகூர்த்த சமயத்தில் கெட்டி மேளத்துடனும் மந்திர, வேத, கோஷத்துடனும் தெய்வீகமாக உண்டாகும் ஆனந்தத்தை அவர்களால் வெல்ல முடியவே முடியாது. சண்டையும் பூசலும் அடுத்த வினாடிதான் தலைதூக்கும்.

6. பந்துக்களின் ஆரவாரமும் விருந்து சாப்பாட்டில் கொண்டுள்ள ஆர்வமும் கூறத்திறமில்லை. பழயகாலத்தைப்போல் 5 நாளைய கல்யாணம் செய்தால் 5 நாள் சம்பிரமமாக இருக்கலாமே என்று நினைத்து ஏங்குவார்கள். சில விஷமிகள் இங்கும் அங்கும் கலகத்தையும் மூட்டி வேடிக்கையும் பார்ப்பார்கள்.

7. பூரிதக்ஷிணை வாங்க வருபவர்களோ, கூட காலணா கொடுக்கமாட்டார்களா! அன்றய சாப்பாட்டிற்குத் தயிராவது வாங்க முடியுமா! என்று எதிர்பார்த்து ஏங்குகிறார்கள். சில இடத்தில் கிடைத்து சந்தோஷப்படுவதும், சில இடத்தில் சேவகன் விரட்டியடிப்பதும் அவர்களுக்குச் சகஜமான உணர்ச்சி. இட்டால் வாழ்த்து; இல்லையேல் தெரிந்தே இருக்கிறது.

—வை. மு. கோ.

# 33

**கர்வங்கொண்ட நாரதரைக் கதறச்செய்தாய்போற்றி**
**கர்வங்கொண்ட அர்ஜுனனைக் கலங்கச்செய்தாய்போற்றி**
**கர்வங்கொண்ட பரமாகண்கள் கலக்கவைத்தாய்போற்றி**
**கர்வங்கொண்ட கருடன்உள்ளம் குழையச்செய்தாய்போற்றி.**

அளிந்த புண்ணாகி சகிக்கவியலாத வேதனையுடன் தத்தளிக்கும் கிருபாவதியின் செவிகளில் பளீரென்று ஒரு மின்னல் தோன்றி மறைவதேபோல் மேற்குறித்த பாடல் விழுந்து, கூறத்திறமற்ற உணர்ச்சிகளையும் பல வருஷங்களுக்கு முன்பு இருந்த நினைவுகளையும் ஒன்றன்பின் ஒன்றாக உண்டாக்கின.

அனுகூலமாகப் பேசி ஒரு ஜட்காவண்டியில் தன்னை ஏற்றி அனுப்பிச் சென்ற மாமியாரின் உருவம் மறையும்வரையில் ஜட்காவில் உட்கார்ந்தபடியே பார்த்துப் பார்த்துப் புலம்பித் துடித்தாள். அவளுடைய நிலைமையை அவளாலேயே சமாளிக்கமுடியாதுபோய் விம்மி விம்மி அழுவதைக்கண்ட வண்டிக்காரக் கிழவன் "ஏனம்மா இப்படிப் புலம்புகிறீர்கள்? அந்தம்மா உங்களைத் தனியாகவிட்டு எங்கே போய்விட்டார்கள்? நீங்கள் எங்கே போகவேண்டும்? உங்களைப் பார்த்தால் பரிதாபமாயிருக்கிறது. யாராவது இறந்துவிட்டார்களா?"... என்று இயற்கையாகக் கேட்டான்.

"இதுவும் நம் தலைவிதிதான். இவனிடம் என்ன பதில் சொல்வது?" என்று அஞ்சினாள். உடனே எதையோ எண்ணியவளாய் ஜட்காவிலிருந்து இறங்கி, "அப்பா! வண்டிக்காரா! இதோ அடுத்த தெருவிலிருக்கும் வீட்டிற்கு வண்டி எதற்கு? நானே போய்விடுவேன். நீ கேட்பதுபோல் என் தாயார் செத்துப்போய் விட்டார்கள். அந்த துக்கந்தான் கதறுகிறேன்" என்று கூறியபடியே வண்டிக்காரனின் பதிலை எதிர்பார்க்காது எதிர் சந்தில் புகுந்து சடக்கென்று மறைந்தாள்.

அந்த தெருவில் போகும்போதுதான் மேற்குறித்த பாடலை பள்ளிக்கூட மாணவிகள் பாடுவது காதில் கேட்டு உடல் சிலிர்த்தது. முன்பிருந்த பள்ளிக்கூடம் சில ஆண்டுகளுக்குள்ளேயே பெருகிவிட்டதால் இன்னொரு வீட்டையும் வாடகைக்கு அமர்த்திக்கொண்டிருப்பதை க்ருபாவதி அறியமாட்டாளாகையால், தான் ஆதியில் பள்ளிக்கூடத்தில் கற்ற பாட்டை இங்கு யாரோ பாடுவதாக நினைத்து ஒரு விநாடி அசைவற்று நின்றாள்.

தன்னை யாராவது கண்டுகொள்வார்களோ என்ற அச்சமும் கூடவே வதைத்ததால் நிற்காமல் தடதடவென்று நடக்கவாரம்பித்தாள். இரண்டு மூன்று தெருக்களைத் தாண்டி தன் மாமன்வீட்டிற்கு எதிரில் வந்ததும், கட்டடமே மாறி முற்றிலும் புதிதாகவிருப்பதைக்கண்டு தூக்கிவாரிப்போட்டது. "நான் இவ் வீட்டைவிட்டுச் சென்று இன்னும் ஆறுமாதங்கூட ஆகவில்லையே! இதற்குள் இவ்வீடு இத்தகைய மாறுதலைபடைந்துவிட்டதா...இதென்ன ஆச்சரியம்!... யாரோ ஒரு வக்கீலின் பெயரிருக்கிறதே...இதிலா மாமாவும் குடியிருப்பார்? ஐயையோ! மாமாவிடமிருந்து பதிலே வராததன்காரணம் இதுவாகத்தான் இருக்குமோ!" என்று பலவிதமான அதிர்ச்சியுடன் குழம்பித்தவித்தாள்.

தன்னுடைய ஸ்வரூபத்துடன் அவ்விட்டிற்குள் போகவும் மனது தவிக்கின்றது. அவ்வீட்டில் உலாவும் பெண்களைப் பார்த்தாலோ சினிமா நக்ஷத்திரங்களைத் தோற்கடித்துவிடும்படியான அலங்காரத்துடன் விளங்குகிறார்கள். தான் தன்னந்தனியே வீதியில் நிற்பதும் வெட்கமாயிருந்தது. மெல்ல மனத்தைச் சமாதானம் செய்துகொண்டு உள்ளே போனாள்.

அப்போது காலை நேரமாதலால் கலாசாலைக்குப் போகப் புறப்படும் பெண்களும் பிள்ளைகளும் கிருபாவதியைப் பார்த்ததும் ஒருவிதமான அச்சத்துடனும் அடுத்த நிமிடமே அலக்ஷியத்துடனும் பெரிதாகக் கத்திச் சிரித்து ஏளனமாக கையைக் கொட்டி உதட்டைக் கடித்தார்கள்.

இந்த ஆரவாரத்தைக் கேட்டு உள்ளிருந்துவந்த வயதான கிழவி கிருபாவதியைப் பார்த்ததும், "இதென்ன துணிச்சலடியம்மா! பிச்சை கேட்க சமையல்

கட்டிற்கு வந்து நீயே அள்ளிக்கொண்டுகூடப் போய்விடுவாய்போலிருக்கிறதே. குழந்தைகள் பார்த்தால் பயப்படுவார்கள். இந்தா ஒரு அணு. போ வெளியே"...என்று கடுமையான த்வனியில் கூறும்போது கிருபாவதிக்கு எப்படித்தான் இருக்கும்! பூகம்பத்தில் அகப்பட்டுத் தவிக்கும் மனிதரின் நிலையைப்போலிருந்தது என்ருல் மிகையாகுமா!

அவள் கட்டுத்தளையை மீறிக்கொண்டு அழுகை வந்துவிட்டது. மெல்ல சமாளித்துக்கொண்டு, "நான் பிச்சைக்கு வரவில்லை பாட்டீ! இந்த வீட்டில் முன்பு சதாசிவம் என்றெருவர் இருந்தாரே, அவரைத் தேடிக்கொண்டுவந்தேன். அவர் எங்கிருக்கிருர்?" என்று யாழினும் இனிய குரலில் கேட்டாள்.

அப்போது மாடியிலிருந்துவந்த அவ்வீட்டு வக்கீல் இக் குரலைக் கேட்டு இறங்கிவந்து, "அம்மணீ! இவ் வீட்டை நாங்கள் வாங்கும்முன்பே அவர் தேசாந்திரம் கிளம்பிவிட்டார்" என்று வெகு சாவதானமாகக் கூறினர்.

செம்மட்டியால் இதயத்தில் பிளப்பதுபோல் தாங்கமாட்டாத அதிர்ச்சி உண்டாகியதால் மெல்ல தலையைக் கையால் பிடித்துக்கொண்டு தடதடவென்று வீதியில் போய்விட்டாள். "தேச யாத்திரையா...ஐயோ! பெத்த தாயும், வளர்த்த மாமியும் எமபுர யாத்திரைபோனது போதாமல் இவர் தேச யாத்திரை வேறு போகவேண்டுமா!...ஐயையோ! நான் நிர்க்கதியாகவா நின்றுவிட்டேன். அனுதரவான இந் நிலைமையில் நான் எங்கு செல்வேன்?...யாரிடம் அண்டி என் காலத்தைக் கழிப்பேன்?...திரும்பி வீட்டிற்கே போய்விடலாமா...ஹா!...என்னுடைய பிரவேசம் என் நாதரின் சந்தோஷத்தைக் கொலை செய்யும்விதத்திலல்லவா முடியும்?... இந் நேரம் அவர்கள் விவாகத்திற்கான சன்னதத்துடன் குசாலாயிருப்பதை நான் ஏன் தடுக்கவேண்டும்? என் கணவரின் ஆனந்தத்தைக்கோருவதன்றே என் கடமை...ஐயோ! நான் எங்கு போவேன்...யாரிடம் என் மர்மத்தைக் கூறுவேன்! யார் என்னை ஆதரிப்பார்கள்?" என்று எண்ணியவாறு முறிந்த மனத்துடன் கால்போன போக்காக நடந்தாள்.

அப்போதிருந்த மனக்கொதிப்பின் துடிப்பில் நேரே போய் குளத்தில் விழுந்துவிடலாமா! என்கிற தைரியம்கூட உண்டாகியது. ஆனல் அடுத்த நிமிடமே அச் செய்கையால் தன் கணவனின் கல்யாணம் தடைபட்டுவிடுமோ! பிணத்தை யாராவது பார்த்து இன்னருடைய பிணம் என்று சொல்லிவிடுவார்களோ! அதனல் தன் கணவனின் சந்தோஷ இதயத்திற்கு ஏதாவது சங்கடம் உண்டாகிவிடுமோ, பெண் கொடுப்பவர்கள் அபசகுனம்போல் சாவு நேர்ந்துவிட்டது; அதனல் கொடுக்கமுடியாது என்று சொல்லிவிடுவார்களோ! என்றெல்லாம் குபீர் குபீரென்று ஒன்றன்பின் ஒன்ருகத் தோன்றி அவளைக் குழப்பிச் சித்திரவதை செய்கிறது.

தன் பாழும் பிறவியினல் சந்தோஷம் ஒன்றும் தன் கணவனுக்கு உண்டாகவில்லையெனினும் சங்கடமாவது ஏற்படாதிருந்தால்போதும் என்கிற ஒரே நோக்கம் அவளைச் சூழ்ந்து வாட்டுகிறது. "தெய்வ சங்கல்பத்திற்குக்கூட பயப்படாது தன்னை இக் கதிக்கு ஆளாக்கிய மனிதர்களிடம் நாம் ஏன் தயாளத்தனம் காட்டவேண்டும்" என்றும் ஒரு எண்ணம் மின்னல்போல் தோன்றியது.

அடுத்த க்ஷணமே, தான் பண்ணின பாபத்தின் மூட்டை போதாதா! இன்னும் மலைபோல் குவியலைச் சேர்த்துக்கொள்ளவேண்டுமா! 'தன்னை இம்சிக்கும் மனிதர்களுக்கும் தான் நன்மையைச் செய்வதுதான் உத்தமலக்ஷணம்' என்று சாஸ்திரமும் வேதமும் முறையிடுகிறதே. ஸ்திரீகளுக்குக் கணவனல்லவா தெய்வம். அவனிடமா வஞ்சனை காட்டுவது?...ஐயோ! அனைதைப் பிணமென்று, கண்டவர்கள் கண்டவிதமாகக் கூறி ஏசும்படியும் பிணத்தைக் கண்டதுண்டமாக அறுத்து கோரம் செய்தும் அதனல் என் கணவரின் கௌரவத்திற்குப் பங்கம் நேரவிடுவதைவிட, 'விதி விதி' என்று வாழ்நாளைக் கடத்துவதே மேலானது.

இந்த கோரத்தின் விபரீதம் என் கண்மணி பிரேமாவின் பிற்கால வாழ்க்கைப் பாதையில் முள்வேலி போட்டதுபோலல்லவா ஆகும்? கஷ்டப்பட்டுச் சாக

வேண்டும் என்று எடுத்த ஜன்மம் கஷ்டப்படாமல் செத்தால்மட்டும் சுகம் வந்து விடுமா! பேயாய் பிறந்து பிரம்படிபட்டு...ஐயையோ! நினைக்கும்போதே பய மாய் இருக்கிறதே...பயித்தியக்காரியென்று நான் போட்ட வேஷம் பலித்துவிட் டால்கூட என் மனது சந்தோஷமடையும்போலிருக்கிறதே. பகவான் அந்த மட்டும் கருணை செய்தாலும் போதுமே...மகமாயீ! என் தாயே...இந்த அனு தைக்கு நீதான் பக்கத்துணை இருந்து காக்கவேண்டும்...என்னை மனிதர்கள் கைவிட்டாலும் நீயும் கைவிட்டு வேடிக்கை பார்க்காதே. இனி உன்னுடைய உக்ரகத்தை என் போன்ற இளம் பெண்களிடமோ, இளம் வாலிபர்களிடமோ குழந்தைகளிடமோ காட்டாதே. என் தாயே! என் பாபத்தை க்ஷமித்துவிடு."

என்று பித்துபிடித்தவள்போல் எண்ணியவாறு குழம்பித் தவிக்கும் மனத் துடன் நடக்கிருள். எங்குபோவது, என்ன செய்வது என்று திக்கு திசை தெரி யாது தத்தளித்தவாறு நிற்கையில் சற்று தூரத்தில் ராதாகிருஷ்ண விக்ரகத்தை வயது முதிர்ந்த ஒரு பெண்மணி கையில் எடுத்துக்கொண்டு ஆனந்தப் பரவசத் துடன் பாடிக் குதிக்கிருள். அவளைச் சுற்றி சுமார் 15 பெண்கள் அந்தப் பாட் டையே மனம் லயித்துப் பாடிக்கொண்டுவரும் பஜனை கோஷ்டியைப் பார்த்ததும் கிருபாவதியை அறியாது உள்ளத்தில் ஒரு இன்ப சக்தி ஊடுறுவிப்பாய்ந்தது. இதயத்தில் ஒரு விநாடி அமிருதம் தோய்ந்ததுபோன்ற ஒரு அத்புதத் தோற்றமும் உணர்ச்சியும் உண்டாயின.

அதே சமயம் அந்த பஜனை கோஷ்டியார் "ஸ்ரீராதாருக்மிணி சமேத ஸ்ரீபார்த்தஸாரதிக்கு ஜே...கோவிந்த நாமசங்கீர்த்தனம், கோவிந்தா! கோவிந்தா!' என்று மெய்சிலிர்க்க மனங்குழைய ஏக குரலில் ஜே கோஷம் முழங்குவதைக் கேட்டதும் கிருபாவதியின் துவண்டுபோயிருந்த நரம்புகளிலெல்லாம் ஆனந்த உணர்ச்சி மின்சாரம்போல் தாக்கி தட்டி எழுப்புவதுபோலிருந்தது.

பக்தி மேலீட்டால் அந்த பஜனை கோஷ்டியை சிலர் வந்தனம் செய்து பர வசமாக நிற்பதைப் பார்த்ததும், ஆதிகாலத்து மீராபாயும் சக்குபாயும், சாக்ஷாத் ஸ்ரீ மகாலக்ஷ்மியின் அம்சமாய் விளங்கிய ஸ்ரீவில்லிபுத்தூர் ஸ்ரீ கோதை நாய்ச்சி யாரின் திவ்ய தேஜஸும் ஒன்று கூடி நினைவுக்கு வந்தது.

சவத்திலும் கேடுகெட்ட சவம்போல் கிடந்த கிருபாவதிக்கு எங்குமில்லாத தெம்பும் ஆனந்தமும் ஆவேசம்போல் வந்ததால் ஒரே ஓட்டமாக அந்த பஜனை கோஷ்டியின் முன் வந்து சாஷ்டாங்கமாய் நமஸ்கரித்துப் பின் தானும் அவர் களில் ஒருத்தியாகக் கலந்துகொண்டாள்.

இந்த ஆனந்தத்தில் அவள் இதயத்தில் தேங்கிக் கிடந்த துக்கம் மறைந்தது போலும், பக்தி என்கிற புதையல் ஆழமாக ஊன்றியதுபோலும் தோன்றியது. இன்பக் கண்ணீர் மாலைமாலையாக உதிர்கின்றது. தேகம் மயிர் சிலிர்க்கின்றது. பஜனையில் தலைவியாக வரும் மாதரசி, 'யார் பாடப்பிரியமோ பாடலாம்'என்ருள்.

இதுவரையில் வெளிநாட்டத்தைக் கண்டறியாத கிருபாவதிக்கு நடுவீதியில் பஜனையில் பாடுவதற்கு அவளையறியாமலேயே ஒரு அபூர்வ சக்தி வெகு ஆர்வத் துடன் இதயத்தைப் பிறிக்கொண்டுவந்ததால் தைரியத்துடன் "அம்மணீ! நான் பாடட்டுமா! என்று வெகு வணக்கத்துடன் கேட்டு உத்திரவும் பெற்ருள். உடனே அவளுடைய பள்ளிக்கூடத்து தோத்திரப் பாடமாகிய **"உலகளந்த உத்தமா உன் பொன்னடிகள் போற்றி"** என்கிற பாடலைப் பாடவாரம்பித்தாள்.

இந்த அதியத்புதமான மதுரகீதத்தைக் கேட்டு ஒவ்வொருவரும் ஆச்சரியத் திலும் ஆனந்தத்திலும் தாக்கப்பட்டு தாமும் கைகளால் தாளம் போட்டுக் கொண்டு பின்பாட்டுப் பாடியும், "ஆஹா! ஹா! என்ன அத்புதமான சாரீரம்! என்ன மதுரகீதம்! கம்பீரமாயும் அழுத்தமாயும் ரவை ஜாதிகள் என்ன அனுயாஸ மாகப் புரளுகின்றன. சங்கீதவித்வான்கள் கெட்டான்கள். ஸ்வரூபத்தைப் பார்த்தால் யாரோ! புல்வெட்டுக்காரியோ! வேலைக்காரியோ என்று நினைத் தோமே! ரூபம் எப்படி இருந்தால் என்ன, அவளுடைய மதுரகீதம் ஒன்றே போதுமே" என்று வீதியோடு போகும் மனிதர்கள்முதல் சூழ்ந்துகொண்டார்கள்.

 பஜனைத் தலைவியின் ஆனந்தம் கரைகடந்தது. ராதா கிருஷ்ண விக்ரகம்கூட ஆனந்தத்தினால் சிரக்கம்பம் செய்வதுபோல் தோன்றி அவளைப் பரவசமூட்டியது.

## 34

"மாமா! இதேது? தங்கள் வருகை எனக்கு மிகவும் ஆச்சரியமாகவிருக்கிறதே! முரளி, கிருபாவதி, ப்ரேமா எல்லோரும் சௌக்யமா! அதுமட்டும் கிருபாவதி பிழைத்தது அந்த மகமாயியின் கிருபைதான். கிருபாவதி எப்போது உங்கள் வீட்டிற்கு வரப்போகிறாள்" என்று நாகராஜன் ஆவலே வடிவாய் விச்வநாதனைக் கேட்டான்.

உண்மையில் விச்வநாதனுக்குப் பதில் சொல்லமுடியாமல் துக்கம் தொண்டையை அடைத்தது. கண்ணால் பொங்கி வழிந்தும் ஓடுகிறது. இதற்குள் கண்ணம்மாள் தனது குழந்தையைக் கொண்டுவந்து விச்வநாதனுக்குக் காட்டிவிட்டு நமஸ்காரம் செய்தாள்.

கண்ணம்மாளின் உருவமும் கிருபாவதியைப்போலவே முற்றும் மாறி அடையாளம் தெரியாமலிருப்பதைக்கண்டு திடுக்கிட்டார். "இவளா கண்ணம்மாள்!"...என்றுகூட எண்ணினார். இவருடைய பிரமிப்பைப்பார்த்த நாகராஜன் "என்ன மாமா! அப்படியே தம்பித்துவிட்டீர்கள்! மகமாயியின் அருள் பிரஸாதம் இந்த மட்டுமாவது எனக்குக் கொடுத்ததற்கு நான் அந்த பரதேவதையை பதினாயிரம்கோடிதரம் வணங்குகிறேன். என் கண்ணம்மாளையும் இதோ என் செல்வனையும் எனக்கு உயிருடன் அளித்த வள்ளல் அந்த மகமாயித்தாயல்லவா! கண்ணம்மாளின் தோற்றம்போலத்தான் கிருபாவதியின் தோற்றமும் இருக்கிறதா...நான் போய் பார்க்க ஓய்வே கிடைக்கவில்லை...

என்று அவன் தன்போக்காகச் சொல்வது ஒன்றுமே விச்வநாதனின் செவியில் விழவில்லை. வாய் பேசவும் முடியாது துக்கந்தான் பொங்குகிறது. தன் மனைவியும் மகனும் தெய்வத்திற்கும் அஞ்சாது நடந்துகொண்ட சதியின் தோற்றமே அவர் மனக் கண்முன்பு தாண்டவமாடுகிறது. "கிருபாவதி எங்கே!... என்னவானாள்!" என்கிற எண்ணமே அவரைக் கொலை செய்கிறது.

நீண்ட மௌனத்தைக் கண்ட நாகராஜனுக்கு வியப்பு குடிகொண்டது. ஒருகால் கிருபாவதிக்கு ஏதாவது...என்றுகூட தோன்றியதால் "மாமா!...ஏன் இப்படி விழிக்கிறீர்கள்? எனக்கொன்றும் புரியவில்லையே...எல்லோரும் சௌக்கியம்தானே! மகமாயியின் விளையாட்டால் கிருபாவதிக்கு ஏதாவது கண்களில் ஊனம் ஈனம் வந்துவிட்டதா! அப்படியிருந்தாலும் மகமாயியை வேண்டி அவள் சன்னிதியில் பிரதக்ஷணம் செய்தால் கண்ணைக் கொடுத்துவிடுவாளே! இதோ பாருங்கள். கண்ணம்மாளுக்கு ஒரு கண்ணில் சிறிது பூ விழுந்திருந்தது. மகமாயி கோயிலை விடாது பிரதக்ஷணம் செய்து பிரார்த்தனை செய்ததில் பூவும் கரைந்து கண் நன்றாக ஆகிவிட்டது வெகு ஆச்சரியமில்லையா மாமா?...

என்பதைக் கேட்ட விச்வநாதனுக்கு பின்னும் வியப்பும் துக்கமும் அதிகரித்தன. மெல்ல சற்று சமாளித்துக்கொண்டு, நாகராஜனின் தோளைப்பிடித்துத் தடவியவாறு, "அப்பா! நாகராஜா! என்னால் பேசவேமுடியவில்லை. மகா உத்தம சீலனாகிய உன்னுடன் சிநேகம் செய்து இத்தனை காலம் பழகியும் முரளி உன் காலில் ஒட்டிய தூசிக்குக்கூட சமானமாகமாட்டான். அவன் தெய்வத்திற்கும் அஞ்சாத கிராதகனாய்விட்டான்.

கிருபாவதியை எந்த அழகுக்காக மணந்தானோ, அந்த அழகு குறைந்துவிட்டதால் அவளை நிராகரித்துத் தாயும் மகனும் படுகுழியில் தள்ளிவிட்டார்கள். அதே வேதனையில் கிருபாவதிக்குப் பயித்தியம் பிடித்துவிட்டது. அவளை மகா பாவி பார்வதி மாமன்வீட்டிற்கு அனுப்புவதாகத் தானே கொண்டுவிட்டுவந்தாள். அந்த சதி எனக்குத் தெரியாது. அவள் மாமனோ தேச யாத்திரை போய்விட்டாராம். அந்த அபலையை எங்கு குளத்தில்தான் தள்ளிவிட்டாளோ! என்ன

செய்திருக்கிறுளோ! என் வயிறு கொதிக்கிறது. உன் முரளி மறுமணம் செய்து கொண்டு ஜம்மென்று 'ஹனிமூன்' போய்விட்டான். இந்தப் பாவிகளின் செய்கையே எனக்குப் பிடிக்கவில்லை. நானும் ஒரு வாரமாக க்ருபாவதியை எங்கெங்கேயோ தேடினேன். கிடைக்கவில்லை. இனி அந்த வீட்டிற்குப் போக எனக்குச் சற்றும் பிடிக்கவில்லை. என்னுடைய சுயார்ஜித ஆஸ்தி முழுவதையும் பிரேமாவுக்கு எழுதி வைத்துவிட்டு நானும் எங்காவது சொல்லாமல் ஓடிவிடலாமென்றுதான் தீர்மானித்துவிட்டேன். ஒரு வேளை கிருபாவதி இங்கிருப்பாளோ! என்று வந்தேன். அதுவும் ஏமாற்றமாகியது. நான் போகிறேன். கிருபாவதியை நீ எங்காவது பார்த்தால் அவளை விடாதே; காப்பாற்று. என் பிழைப்பை நினைத்தாலே என்னுயிர் துடிக்கிறது'' என்று மெஷின்போல் கூறினர்.

இந்த எரிமலைபோன்ற வார்த்தையைக் கேட்ட நாகராஜனும் கண்ணம்மாளும் ''ஹா... கிருபாவதியைத் தள்ளிவிட்டார்களா! பயித்தியம் பிடித்துவிட்டதா! முரளிக்கு மறு விவாகமா... ஐயையோ! இந்த அக்ரமத்தை தெய்வம் பொறுக்குமா! இந்த அநியாயத்தைச் செய்ய அவர்கள் மனது எப்படித் துணிந்தது? என் இதயம் வெடித்துவிடும்போலிருக்கிறதே நானே கிருபாவதிக்கு எமனாக ஆய்விட்டமாதிரியல்லவா இருக்கிறது. மாமா! இந்த கஷ்டத்தை நீங்கள் எப்படிப் பொறுக்கிறீர்கள். பயித்தியமா பிடித்துவிட்டது. கிருபாவதிக்கா!... இந்த அதிர்ச்சியைத் தாளவேமுடியவில்லையே! வீதிவீதியாகவா அந்தப் புண்யவதியை அலைய விட்டார்கள். உண்மையாகவா முரளி மறுவிவாகம் செய்துகொண்டான்... தெய்வச் செயலைக்கூடவா அவன் எதிர்த்து ஏமாற்றத்துணிந்தான். மாமா! என்னுல் இந்த அக்ரமத்தைச் சகிக்கமுடியவில்லை. அவன் எந்த ஊருக்குப்போயிருக்கிருனே சொல்லுங்கள். நான் கட்டாயம் அங்குபோய் அந்த கிராதகனை என்னுத்திரம் தீரத் திட்டிவிட்டு வருகிறேன். அவனுடைய அடாத செய்கையை உலகமறிந்து அவனைத் தூற்றிச் சிரிக்கவைக்கிறேன். 'அழகு அழகு' என்று அடித்துக்கொள்ளும் அவனை அழகா காப்பாற்றப்போகிறது? உத்தம நண்பன் என்று நான் நம்பி என்னுயிரையே வைத்து நேசித்ததெல்லாம் வெறும் வெளித்தோற்றமும் கானல் நீரும்போலவா ஆய்விட்டது! என்ன அக்ரமம்? மாமா! கிருபாவதி இருக்குமிடம் தெரியவில்லையா! போலீஸில் எழுதிவிடட்டுமா'' என்று ஆத்திரத்தில் தேகம் பதற, ரத்தம் கொதிக்கக் கேட்டான்.

விச்வநாதனுக்கும் அதற்குமேல்தான் கொதிக்கிறது. என்ன செய்வார் பாவம்! நாகராஜனுடைய அப்போதிய நிலைமையில் முரளி எதிரில் அகப்பட்டால் ஹிரண்யனின் குடலைப் பிளந்ததுபோல் பிளந்துவிடுவான் என்றே தோன்றியது. என்னதான் சமாதானம் செய்யமுடியும்?...நாகராஜன் மீண்டும் பேசத்தொடங்கி, 'மாமா! தெய்வத்துக்கு அஞ்சாத மனிதனைச் சித்திரவதை செய்வதில் குற்றமே இல்லை. '**அரசன் அன்று கொல்லும், தெய்வம் நின்று கொல்லும்**' என்கிற பழமொழி வீணாகாது. எனினும் என்னுள்ளம் கொதிக்கும் வேகத்தால் பொறுமையின் எல்லை கடந்துவிட்டது. நான் இப்போதே கிருபாவதியைப்பற்றி போலீஸில் எழுதித்தான் வைக்கப்போகிறேன்.. முரளியின் நீண்ட மௌனத்தின் ரகஸியம் தெரியாமல் இதுவரையில் தத்தளித்தேன். அவனுடைய துரோகபுத்தி இப்போதல்லவா தெரிகிறது. இதோ வருகிறேன். இருங்கள்' என்று கிளம்பினுன்.

**விச்வநாதன்**:—ராஜா! பதருதே. உட்காரு இதோ பத்திரிகையைப் பாரு. அந்த அறிவுகெட்ட சண்டாளனுக்கு '**ராவ் சாகிப்**' பட்டம் வேறு வந்திருக்கிறது. அந்தப் படுபாவி என் வயிற்றில் பிறந்தும் அவன் எனக்குச் சத்ருவாகவே தோன்றுகிருன். எனினும் நாம் அவசரப்பட்டுப் போலீஸில் எழுதிவிட்டால் அவனுடைய கௌரவத்திற்கு உடனே ஹானி உண்டாகும். கிருபாவதி நன்ருக இருந்தாலும் பரவாயில்லை. அவளுக்கோ பயித்தியம் பிடித்திருக்கிறது. நாம் பலனில்லாது காரியம் செய்வதில் என்ன லாபம்? கிருபாவதியை எப்படியாவது ரகஸியமாகவே தேடிப்பிடித்துச் சரியானபடி வைத்தியம் செய்து மூளைக் கோளாறைத் தெளியச்செய்தபிறகு, அவளைக்கொண்டே அந்த அல்பனின்

மானத்தை வாங்கச் செய்யவேண்டும் என்றுதான் நான் பாடுபடுகிறேன். அந்தச் சண்டாளனுக்காக நாம் பார்க்காவிடினும் கண்மணி ப்ரேமாவின் எதிர்கால வாழ்க்கைக்கு யாதொரு பங்கமும் நேராது நாம் பார்க்கவேண்டாமா! அது பெண் குழந்தையாயிற்றே! தாயார் பயித்தியம்பிடித்துத் திரிந்தாள் என்கிற வதந்தி பிரேமாவின் வாழ்க்கையில் ஒரு கறும்புள்ளி வைத்ததுபோலல்லவாமுடியும்? அதை அழிக்கவேமுடியாதே. பயித்தியக்காரியின் மகள் என்கிற வார்த்தையை நாமே கிளப்பக்கூடாது. அதனால் தான் நான் தீவிரமாக யோசனைசெய்து, அவசரப்பட்டுப் போலீஸில் தெரிவிக்காமல் வந்தேன். அவளை ரகஸியமாகக் கண்டுபிடிப்பதுதான் சரியான முறை.

**நாக:**—என்ன மாமா! நீங்கள் அப்படி இப்படி அசையவிடாது முட்டுக் கட்டைபோடுகிறீர்கள். என் மனக் கொதிப்பின் வேகத்தை நீங்கள் அறியவில்லைபோலும், நானுகத் தேடி அந்த உத்தமியைக் கெடுத்ததுபோன்றல்லவா முடிந்தது. அந்த முட்டாளுக்குப் பட்டம் வேறு வந்துவிட்டதா! அவன் எங்குதான் தொலைந்திருப்பான்! அதுகூடவா தெரியாது? அது கிடக்கட்டும்; மாமி பிரேமாவைச் சரியானபடி வளர்த்துக் காப்பாற்றுவாளா! அதையும் கொலை செய்துவிடுவாளா! எனக்குச் சந்தேகமாகவே இருக்கிறதே.

**விச்:**—உம். மலையத்தனை பாவத்தில் கடுகத்தனை புண்ணியம் இருப்பது போல் அந்த பிரம்மராக்ஷஸி குழந்தையிடத்தில் உயிராயிருக்கிருள். அதில் கடுகளவும் சந்தேகமே இல்லை. அப்படி ஏதாவது இருக்குமாயின் நான் அவளிடமிருந்து குழந்தையை அன்றே பிரித்திருப்பேன் குழந்தையைப்பற்றி பயமே வேண்டாம். இப்போது நாம் கவனிக்கவேண்டியது கிருபாவதிதான். அவளைக் காணுது என்னுயிர் பறக்கிறது. அவள் மகா மானியாயிற்றே! ஒருவேளை அவளுக்கு திடீரென்று தெளிவு உண்டாகிய சமயம், தனது பரதேசித்தனத்தைக் கண்டு தாளாது தற்கொலை செய்துகொண்டு விடுவாளோ! என்கிற திகில்தான் என்னைக் கலக்குகிறது. இதற்கு என்ன செய்யலாம் சொல்லு. நான் இனி அந்த வீட்டுப்பக்கம் போகப்போவதில்லை. என் கால்போன போக்காகப் போகிறேன். கிருபாவதி அகப்பட்டால் உடனே நேரே இங்கு அழைத்துவருகிறேன். அப்படியில்லை என்றால் என்னைப் பார்க்கவே முடியாது. அதற்குள் உன் கண்ணில் பட்டால் நீ எனக்கு அறிவிக்க ஒரே மார்க்கம் உண்டு. அதாவது பத்திரிகையில் விளம்பரம் செய்துவிடு. கிருபாவதி என்று பெயர்போடாது, "**குழந்தை கிடைத்துவிட்டது. நாகராஜன்**" என்று மட்டும்போடு. நான் புரிந்துகொண்டு உடனே வந்து சேருவேன். என் மூளைகூடக் கலங்கிவிடுமோ என்று பயமாயிருக்கிறது—என்ருர்.

**நாக:**—மாமா! நீங்கள் சொல்வது சுத்த பயித்தியக்கார யோசனை. நீங்கள் ஓடிப்போவதாவது, விளம்பரம் செய்வதாவது. அதெல்லாம் வீண் கனவு. நீங்கள் உங்கள் வீட்டைவிட்டுப் போகக்கூடாது. குழந்தை உங்கள் கண்காணிப்பில் இருப்பதுதான் நலம். நாம் ரகஸியமாகத் தேடுவோம். மகமாயித்தாயி நமக்குக் காட்டிக்கொடுப்பாள்; பயப்படவேண்டாம். நீங்கள் உங்கள் வீட்டிலிருக்க ப்ரியப்படாவிடில் இங்கேயே இருங்கள். வீண் அசட்டுப் பிடிவாதம் வேண்டாம். என்ன யோசனை?—என்று சுதந்திரத்துடன் அதட்டிக் கூறினுள்.

**விச்:**—நீ சொல்வது ஒன்றுமே என் காதில் விழவில்லை. என் மனமும் தவிப்பும் உனக்குத் தெரியவில்லையா!

**நாக:**—தெரியாமலில்லை மாமா! உங்கள் யோசனையை இச்சமயம் விலக்க வேண்டியதுதான். அதோடு ஒருகால் கிருபாவதி அகப்பட்டுவிட்டால் அவளுக்கு ஆதரவு யாரிருக்கிறார்கள்? நீங்கள் அவளுக்காகவாவது வீட்டுடன் இருக்கத்தான் வேண்டும். நீங்கள் முதலில் ஸ்நானம் செய்துவிட்டுச் சாப்பிடவாருங்கள். நான் சற்று வெளியே போய்வருகிறேன்... கண்ணம்மா! நீ முதலில் அவரைச் சாப்பிடச் செய்துவை; நான் வருகிறேன்.—என்று கூறியவாறு அவசரமாக வெளியே போனுன்.

நாகராஜனின் பரிசுத்த இதயத்தினழகையும் தாம்பத்ய ஒற்றுமையையும் கண்டு உள்ளம் பூரித்த விச்வநாதனுக்குத் தன் மகன்மீது எங்குமில்லாத கோபமும் வெறுப்பும் அபாரமாக உண்டாகி மனத்திற்குள் சபித்துக்கொண்டார். அக்கினி சாக்ஷியாகத் தான் கைப்பிடித்த கண்மணியை, அதிலும் மகா குணவதியான ரத்தினத்தை நிராகரித்த மனிதன் நன்ருயிருப்பானு! அவன் நாசமாகப் போய்விடமாட்டானு! பெற்றவயிறே எரிந்து சாபமிடும்போது மற்றவர்கள் சபிப்பதைக் கேட்கவேண்டுமா! அந்தப் படுவாவி சாகக்கூடாது. சாகாது இருந்து தான்செய்த சதிக்கு, த்ரோகத்திற்கு இந்த ஜென்மத்திலேயே அனுபவித்து இம்சைப்பட்டு அனுபவிக்கவேண்டும்'' என்று இதயபூர்வமாகத் திட்டுகிருர். கிருபாவதியைவிட கண்கூட ஊனம் ஏற்பட்டிருக்கும் கண்ணம்மாளிடம் நாகராஜன் எத்தனை ப்ரியமாக நடக்கிருன், எப்படி பச்சாத்தாபம் காட்டி அவளை முன்னிலும் பதின்மடங்கு அதிகமாக நேசிக்கிருன் என்பதை நினைக்க நினைக்க நாகராஜன்மீது அவருக்கு ஏற்கெனவே இருந்த அன்பைவிட ஆயிரம்பங்கு அதிகமாகப் பெருகிப் பூரித்தது.

## 35

ஆனந்தமாக ஹனிமூன் சென்ற தம்பதிகள் தங்களையும் மறந்தார்கள், உலகத்தையும் மறந்தார்கள். எந்தெந்த ஊர் வெகு அழகாகவும் நவநாகரீகச் சிகரத்தை எட்டக்கூடியதாகவும் இருக்கிறதோ, அந்தந்த ஊர்களுக்குப் போய் ஓட்டலிலேயே தங்குவதும் ஸினிமா, ட்ராமா முதலிய கேளிக்கைகளுக்குப் போய் களிப்பதும் நதிகளில் படகுவிட்டு விளையாடுவதும் மலைகள்மீது ஏறி இன்புறுவதும் இயற்கை அழகுடன் கூடிய பல இடங்களைப் புகைப்படம் பிடித்து மகிழ்வதுமாகவிருக்கும் குசாலில் முரளி தன் வீட்டையும் குழந்தையையுங்கூட மறந்துவிட்டான். இந் நிலையில் கிருபாவதியை ஏன் நினைக்கப்போகிருன்?

இளைய மனைவி அழகில் சிறந்தவளேயன்றி சங்கீதத்தில் அத்தனை இன்பமில்லை. சாதாரண கல்யாணப்பாட்டாகவே இருந்ததால் அது விஷயத்தில்மட்டும் முரளி என்ருவது சற்று விசனிப்பான். அழகு வெள்ளத்தில் அந்த சிறிய விசனமும் அடித்துக்கொண்டுபோயிற்று. கிருபாவதி அதிகமான படிப்பும் டாம்பீகமும் நவநாகரிகமும் இல்லாது எத்தனைக்கெத்தனை வெகு எளிய வாழ்க்கை நடத்திஞளோ, அதற்கு முற்றிலும் மாருக நாகரீக சாகரத்தில் அமிழ்ந்ததோடு முரளியையும் புதிய மனைவியாகிய பேபி அமிழ்த்திவிட்டாள்.

''நாகரீக சகாக்களுடன் சேர்ந்திருக்கும்போது அவர்களுடன் நீங்களும் சுருட்டுப்பிடித்துக் கலகலவென்று பழகினுல்தான் அவர்களை கௌரவித்ததாகும். அவர்கள்மட்டும் பிடிப்பது, நீங்கள் சும்மாவிருப்பது என்ருல் அது நாகரீகத்திற்கு முற்றும் பொருந்தாதது'' என்ற அத்புதமான உபதேசத்தை பேபியும் அவள் அண்ணுகிய சுந்துவும் செய்து முரளியை புகைவிடப் பழக்கிய பெருமையை விரைவிலேயே அடைந்தார்கள். கிருபாவதி முரளியின் சகல காரியங்களையும் தானே கவனித்துச் செய்துவந்தாள். பேபியோ, சகலத்திற்கும் ஆள் போட்டுவிட்டாள். ''எப்படியானுல் என்ன. காரியம் ஆகவேண்டியதுதானே!'' என்று முரளியும் த்ருப்தியடைந்தான்.

முரளிக்கு பட்டம் வந்ததைப் பாராட்டிப் பல நண்பர்கள் விருந்து வைத்தார்கள். பேபியின் ஆப்த சினேகிதையான சக்குபாய் முரளிக்கு வெகு தடபுடலாக விருந்து நடத்திஞள். பல பெரிய மனிதர்களும் அதில் கலந்துகொண்டார்கள். விருந்து நடக்கும்போது அனேகவிதமான சம்பாஷணைகள் நிகழ்வது சகஜம். ஆனுல் சக்குவின் கணவன் ரேடியோ நிலயத்து உத்யோகஸ்தனுகையால் அவன் சாப்பிடும் ஹாலுக்கு நேராக ரேடியோவை கனெக்ஷன் செய்தான். முதலில் தமாஷ் நாடகம் ஒன்று நடந்தது, அதைக் கேட்டு எல்லோரும் வயிறு குலுங்கச்சிரித்துச்சிரித்து மகிழ்ந்தவாறு சாப்பாட்டைச் சரியாகக்கவனித்தார்கள்.

தமாஷ் நாடகம் முடிந்ததும் ''தேவகானமோ! மதுரகீதமோ!'' என்று ப்ரமிக்கும்படியான நிலைமையில் ஒரு அத்புதமான குரல் கிளம்பி **ஷண்முக**

ப்ரிய ராகத்தை ஆலாபனம் செய்தது. இவர்கள் தமாஷ் நாடகம் கேட்டுச் சிரித்துப் பேசும் ஸ்வாரஸ்யத்தில் அறிவிப்பைக் கேட்காதுபோயிற்று.

ஷண்முகப்ரியா ராகம் பாடும் குரலைக் கேட்ட முரளி மின்ஸாரத்தினல் தாக்கப்பட்டவன்போல் கையில் பிடித்த சாதத்தை அப்படியே வைத்தவாறு தம் பித்துப்போய் ரேடியோ த்வனியில் லயித்தான். "இது கிருபாவதியின் குரல் போலிருக்கிறதே! அந்த அத்புதமான சாரீரமும் அவளைத் தவிர வேறு ஒருவருக்கும் இருக்கிறதா! அடாடா...அசல் அவளைப்போலவே இருக்கிறதே...ஒரு வேளை க்ருபாவதிதானே!...உம்...அவள் பயித்தியம் பிடித்தவளல்லவா...அவளாவது ரேடியோவில் பாடுவதாவது...எந்த புண்யவதியோ! எந்த பாக்யசாலி அவள் கைப்பிடித்து இன்புற்று இச் சங்கீதமதுவை உண்டு வண்டுபோல் ரீங்காரம் செய்கிருனே!...என்று எண்ணி அப்படியே அசைவற்ற நிலையில் பழய கால நினைவில் மனது தாவியோடிக் குழம்பி இன்னதென்று கூறத்திறமற்ற சித்திரவதை செய்கிறது. பெருமூச்சு துரத்தியடிக்கிறது.

**ப- அடிமையல்லவோ! உமக்கடிமையல்லவோ!**
**அடியாள் கதறுதல் கேட்டிலையோ (அ)**

**அ- துடிக்கும் மனத்தின் துயரம்தன்னைத்**
**துலைத்திடாது சோதனை ஏனே? (அ)**

என்கிற பாட்டைப் பாடினுள். உண்மையில் இந்த அம்ருதகானத்தைக் கேட்ட அங்குக்கூடிய ரஸிகர்களின் மனத்தைக் குழையச்செய்து ஆனந்தக்கண்ணீரைத் துளிர்க்கச் செய்தது. முரளிக்குத் தன் தடுமாற்றத்தை யாராவது கண்டுவிடப் போகிருர்களே என்று அச்சமும் ஊடே வதைக்கின்றது. அவனுல் இலையில் உட்கார முடியவே இல்லை. தத்தளிக்கும் சமயம் அங்கு சாப்பிடும் ஒரு கனவான், "அடாடா! என்ன அத்புதமான சங்கீதம்! இம்மாதிரி மதுரகீதத்தைக் கேட்டு வருஷக்கணக்காகிவிட்டது சார்! சில வருஷத்திற்கு முன்பு யாரோ கிருபாவதி தேவி என்று ஒருவர் பாடியிருக்கிருர். அதற்குப் பிறகு அத்தகைய ரமணீயமான கானத்தை இன்றுதான் கேட்கிறேன்...ஒருவேளை அதே மனுஷிதானு!...ஏன் சார்! பெயர் அறிவிப்பைச் சரியாய் கவனிக்கவில்லை. யார் சார் பாடுவது?" என்று வீட்டு எஜமானரைக் கேட்டார்.

இதைக்கேட்ட அவர், "யாரோ லக்ஷ்மீபாயாம், கோட்டையூர் ரேடியோவில் பாடுவதை இங்கு திருப்பினேன். எத்தனை அழகாயிருக்கிறது பாருங்கள். ரேடியோவில் விடிந்தால் அஸ்தமித்தால் பலபேர் பாடவருகிருர்களே யன்றி இத்தகைய அத்புதமான சங்கீதம் யாரிடம் அமைகிறது? நூற்றுக்கு ஒருவர் கூடத் தேறுவதில்லை" என்ருர். அதே சமயம் ரேடியோவில்,

**கரங்களிருந்தும் நான் மொண்டி; இரு கண்களிருந்தும் நான் குருடி**
**சிரசுஇருந்தும் நான் முண்டம்; இரு செவிகள் இருந்தும் நான் செவிடி.**
**முறையிடும் வாயும் முழு ஊமையன்ருே! கால்களிருந்தும் நான் நொண்டி**
**அருமைக்குழவி இருந்தும் நான் மலடி; ஆருயிர்க்கணவனிருந்தும் நான்**
**[பாவி.**

என்கிற பாடலை ராகமாலிகையாக மனமுருகக் கண்ணீர் பெருக இதய பூர்வமான உணர்ச்சியுடன் பாடுவதைக் கேட்க முரளியின் இதயத்தைப் பிச்சி வாட்டி வதைக்கின்றது. அங்கு தான் விருந்து சாப்பிடுவதாகவே நினைக்கவில்லை. அகந்தை கொண்டு தான் கிருபாவதியைத் தள்ளிவிட்டு ஆனந்தமாகத் தோன்றிய உள்ளத்திற்கு ஒருக்ஷண நேரம்மட்டும் நரகவேதனையாகத் தோன்றியது. :**கணவனிருந்தும் நான் பாவி**'...என்று பாடும் அடி அவன் அந்தராத்மாவை அணுகி அடிப்பதாகவே தோன்றியது.

கூட சாப்பிடுகிறவர்கள் எல்லாம், "ஆஹா ஹா! என்ன அர்த்த பாவம்... என்ன உருக்கமான பாட்டு. சோகரஸத்தில் ஆழ்ந்து அனுபவித்துப் பாடுவது

போலல்லவா இருக்கிறது. அடாடா!"...என்று ஆர்ப்பரித்தவாறு சாப்பாட்டையும் ஒரு கை செவ்வையாகக் கவனிக்கிறார்கள்.

சங்கீதத்தில் விருப்பமோ, அனுபவமோ, ஆசையோ இல்லாத சில மனிதர்கள்கூட இந்த அத்புதமான கானத்தைக் கேட்டுத் தம்மையறியாது அதன் ருசியை அனுபவித்து, "பேஷ்! சாரீரம் என்றால் இப்படியல்லவா இருக்க வேண்டும்? என்ன மாதுர்யகானம் சார்!" என்றார்கள்.

கூட்டத்திலிருந்த இன்னும் சிலர், உண்மையிலேயே இந்த சங்கீதச் சங்கிலியால் கட்டுண்டுபோய், "ஆஹா ஹா!" என்று ஆர்ப்பரித்ததோடு, "சார்! உங்களுக்கு எப்படித்தான் நன்றி செலுத்துவதென்று தெரியவில்லை. இந்த சாப்பாட்டு விருந்தைவிட சங்கீத விருந்தை நாங்கள் அமோகமாக வரவேற்று ரஸிக்கின்றோம். அதற்காக ஸ்பெஷலாக உம்மைப் பாராட்டுகிறோம்" என்று நன்றி கூறினார்கள்.

அக்கூட்டத்திலிருந்த ஒருவர் "இந்த குரலைக்கேட்டால் எனக்கு அந்த க்ருபாவதியின் நினைவே வருகிறது. என் பெண்ணும் அவளும் ஒரே வயதினர்கள். ஒரே பள்ளியில் படித்தவர்கள். ஒரே வீதியில் குடியிருந்தோம். அதனால் அந்தச் சிறுமி பள்ளிக்கூடத்து விஷயமாயும் விளையாட்டு விஷயமாயும் அடிக்கடி எங்க வீட்டிற்கு வருவாள். அழகிலும் அந்த பெண் சங்கீதத்தைப் போட்டியிடுபவளாகவே இருந்தாள். அவளை ரேடியோவில் பாடவைக்க வேண்டுமென்று அவளுடைய மாமாவுக்கு வெகு வெகு ஆசை. ஏன் சார்! இக் காலத்தில் பணம் இல்லாவிட்டால் எந்த காரியந்தான் நினைத்தபடி முடியும்? பணக்காரர்களாக இருந்தால் ரேடியோ நிலயத்திற்கு சிபார்சு கடிதங்களும், நேரில் சிபார்சு செய்வதும் பல பெரிய மனிதர்களிடமிருந்து பறக்கும், பிறகு பாட்டு நன்றாயிருந்தாலும் இல்லாவிட்டாலும் சான்ஸ் கிடைப்பதில் குறைவே இராது. மாதம் ஒரு முறைகூட வந்துவிடும். ஏழைப் பெண்ணுக்கு சிபார்சு செய்பவர்கள் யாரிருக்கிறார்கள்? நான்கூடத்தான் முனைந்து பார்த்தேன். ஒன்றும் பலிக்கவில்லை. அதோடு அதிகநாள் நான் அவ்வூரிலிருக்கமுடியாது மாற்றிவிட்டார்கள். வெளியூர் போய்விட்டேன்; பிறகு அவர்கள் விஷயமே தெரியவில்லை. 'அந்தப் பெண்ணின் அழகுக்கும் நிகரற்ற மதுரகீதம் பொழிவது போன்ற சங்கீதத்திற்கும் எந்த ரஸிகனாவது வந்து கொள்ளையடித்துக்கொண்டு போய்விடுவான். நீர் கவலைப் படாதேயும்' என்று நான் அடிக்கடி அவ மாமாவிடம் சொல்லுவேன். யார் வந்து கல்யாணஞ்செய்துகொண்டார்களோ! எந்த புண்ணியவான் அந்த செளந்தர்யவதனியுடன் இன்பவாரிதியில் மிதக்கிறானோ! எவன் கொடுத்துவைத்திருக்கிறானோ! எங்காவது அவள் நன்றாக இருந்தால் போதும்."

என்று கூறும் வார்த்தைகள் ஒவ்வொன்றும் ஒவ்வொரு கூரிய பாணம்போல் முரளியின் இதயத்தில் பாய்ந்து, அவனைக் கலக்கிக் கொலை செய்வதற்கொப்பச் சித்திரவதை செய்கிறது. "ஐயோ! நான்தான் அந்தப் புனிதவதியை மணந்தும், மகிமையறியாது மனங்கலங்கித் தவிக்கவிட்ட மகாபாவி. தெய்வத்திற்கும் அஞ்சாது ராக்ஷஸ குணமும் திமிரும்படைத்து அவ்வுத்தமியின் வயிறெரியச்செய்த சண்டாளன் என்று கூறிவிடலாமா" என்றும் அவனைமீறிய ஒரு உத்வேகம் இதயத்தைப் பிறிக்கொண்டு எழுந்தது. தனக்காகவே நடக்கும் விருந்தின் கௌரவத்தையும் அங்குத் தன் புதிய மனைவி இருப்பதையும் கண்டு மனத்துடிப்பை வெகு பிரயாஸையுடன் சற்று அடக்கிக்கொண்டான்.

பேபியின் பக்கத்தில் விருந்து நடத்தும் பாக்யவதி உட்கார்ந்து சாப்பிடுகிறாள். அந்தம்மாளுக்கும் பேபிக்கும் இந்தப் பாட்டு பிடிக்கவேயில்லை. "இதென்ன மயானகாண்டத்து அழுகையாயிருக்கிறது. ஆனந்தமாய் சாப்பிடும்போது குருடி, செவிடி, நொண்டி... என்று என்ன பிலாக்கணம் வேண்டியிருக்கிறது? சோறு இருந்தும் நான் பட்டினி... என்று நானும் பாடுகிறேன்... என்று அகம்பாவமும் அலக்ஷியமுமான த்வனியில் ஏளனமாகப் பாடி அழகுக்காட்டி கணவனை முறைத்துப் பார்த்தாள்.


OFFICE OF THE REGISTRAR ...
14
16 AUG 1943
MADRAS

இதைப்பேசியும் இன்னும் சில கனவான்களும் தடபுடலாக ஆமோதித்து கடகடவென்று எக்காளம் போட்டுச்சிரித்து...மயிர் இருந்தும் நான் மொட்டை...மூச்சு இருந்தும் நான் கட்டை...என்று பாடினார்கள். ஒரே சிரிப்பு. கலகலவென்ற சப்தம் அந்த ஹாலில் சூழ்ந்து கொண்டது.

மனைவியின் பார்வையில் கதி கலங்கிய கணவன் டக்கென்று ஸ்விச்சை மாற்றிவிட்டான். மனத்தை இன்பவாரிதியில் மிதக்கச் செய்த மதுரகீதம் மறைந்து பிசாசு கானம் பொழிவதேபோல் சினிமா நக்ஷத்திரங்கள் இருவர் பாடும் த்வனி பலவித வாத்ய கோஷத்துடன்,

**"நானே உனக்கேற்ற மதனன்**
**நீயே எனக்கேற்ற ரதியே!**
**காதல்புரிவோம்...கட்டியணைவோம்**
**மாதரசே இன்னும் மயக்கமேனோ!"**

**"மயக்கமும் இல்லை...தயக்கமும் இல்லை**
**மன்மதனே சுகுமாரா!**
**மங்கை என்னருகினில் வாராய்."**

என்ற காதல் நாடகம் ஆரம்பமாயிற்று. இதைக் கேட்ட உண்மை ரஸிகர்கள் "சேச்சே...இதென்ன கூத்து சார்!...நல்ல சமயத்தில் மென்னியைப் பிடிப்பது போல் நிறுத்திவிட்டு ஏதோ வைத்தீர்களே...இதைவிட ரேடியோவையே நிறுத்தி விடுங்கள்"...என்றார்கள்.

சிலரோ இந்த பாட்டுக்குச் சரியாகத் துடையில் தாளத்தைத் தட்டிக் கொம்மாளமடித்தவாறு, "ஓகோ! அந்த ஜோடியா! பேஷ்...நிறுத்தவேண்டாம் சார்!...இத்தனை நேரம் கேட்ட அழுகை இதில் மறைந்துவிடும்." என்றார்கள்.

இந்த வார்த்தைகள் ஒன்றும் முரளியின் காதில் விழவில்லை. அவன் கண் முன்பு கிருபாவதியின் ஆதிகால ரூபத்தின் பிம்பமும், அடுத்தக்ஷணம் மகமாயி ப்ரஸாத பிம்பமும், அதற்கடுத்த விநாடி பயித்தியக்கார பரிதாப பிம்பமும் வரிசையாக மாறிமாறித் தோன்றிக் கொலை செய்கிறது. அந்த அதிர்ச்சியை அவனால் சகிக்கவே முடியாதுபோனதால் இலையைவிட்டு சடக்கென்று எழுந்துவிட்டான். "எனக்கு திடீரென்று வயிற்றைப் புரட்டுகிறது, நான் வெளியே போகிறேன். நீங்களெல்லோரும் சாப்பிடுங்கள்" என்று கூறிவிட்டுப் போனான்.

சிலர் வியப்புடன் நோக்கினார்கள். சிலர் 'என்ன உடம்பு?' என்றார்கள். அதற்கு பேபி ஒருவாறு நகைத்துக்கொண்டு, "ஓ! உடம்பு ஒன்றுமில்லை. அடிக்கடி அவருக்கு இப்படித்தான் ஒரு சிஸம் வரும். அதனால் பயமில்லை" என்று நமட்டுச் சிரிப்புடன் கூறினாள். அதைக் கேட்டு சிலர் கொல்லென்று சிரித்தார்கள். முரளி இதொன்றையும் காதில் வாங்காமல் நேரே கையலம்பிக் கொண்டு ஒரு சோபாவிலமர்ந்தான். மனது குழம்பிப் போராடுகிறது. தான் ஏதோ பெருத்த அபராதத்தைக் கடவுளுக்கே செய்துவிட்டதாகத் தோன்றி அவனை யறியாமலேயே வதைப்பதால் வீட்டுக்காரனிடம் சொல்லிவிட்டுத்தன் விடுதிக்குப் போய்விட்டான். என்றுமில்லாத அதிர்ச்சியுடன் அவனுக்கு க்ருபாவதியின் பிம்பம் மூன்று உருவங்களில் தோன்றி, "என்னை இப்படிக் கைவிட்டது நியாயமா! தருமமா? கடவுள் உமக்கு உதவி புரிவாரா...அக்கினி சாக்ஷியாய் கைப்பிடித்த மனைவி நானல்லவா! என் வெளியழகு குறைந்தாலும் உள்ளழகும் மதுரகீதமும் உங்களுக்குத் தெரியவில்லையா?" "என்று கெஞ்சுவது

போலும் "அடேபாவி! எனக்கு நீ செய்த த்ரோகம் உன்னை அழித்துவிடும்" என்று சாபமிடுவதுபோலும்.....தோன்றி பயமுறுத்தும் வேகத்தில் கதிகலங்கிப்போய் அப்படியே படுத்துவிட்டான். இருக்கை கொள்ளவில்லை. அங்குமிங்கும் உலாவினான். பேபி இன்னும் வரவில்லை. மணியோ 10 அடிக்கப்போகிறது. மீண்டும் ரேடியோவைத் திருப்பினான்.

ஏதோ ஒரு பாடகரின் பாட்டு முடிந்தது. உடனே... "ஸ்ரீமதி லக்ஷ்மீபாய் அவர்கள் மீண்டும் பாடுவார்கள்" என்றதைக் கேட்டு அசந்து நிற்கும் சமயம் **"தாரணியின் ஜோதீ ஸ்வரூபஹரே"**...என்கிற பாட்டு ஆரம்பமானதைக் கேட்டு திடுக்கிட்டு மெய்சிலிர்த்து ரேடியோவின் பக்கலில் அப்படியே உட்கார்ந்துவிட்டான். "ஐயோ! என்னை பகவான் சோதிக்கின்றாரா.... அல்லது தண்டனை செய்கிறாரா.....கிருபாவதியின் மதுரகீதம் போலவே இருக்கிறதே..

அவளைப்போலவே பாடும் புண்யவதி யாரோ தெரிய வில்லையே...ஒவ்வொரு அசையும். ஒவ்வொரு ரவை ஜாதி அகாரமும் என்னிதயத்தை எட்டித் துளாவுகிறதே. ஐயோ!...என் கிருபாவதி எங்கு பயித்தியமாக அலைகிருளோ...நான் இத்தகைய பாதகனுகவா ஆய்விட் டேன்...அவளைத் தள்ளிவிட்டு வயிறெரியச் செய்யும் சண்டாளனுகவா ஆய்விட் டேன்!'' என்று நினைக்கும்போது குபீரென்று வெயர்வை வென்னீர் வெள்ளம் போல் பொங்கி வழிந்தது.

## 36

வெளியில் சென்ற நாகராஜன் வந்தால் தன்னை விடமாட்டான் என்று தெரிந்ததால் விச்வநாதன் கண்ணம்மாளைக் கூப்பிட்டு, "அம்மணீ! எனக்குப் பசியே இல்லை. நான் சாப்பிடவில்லை என்று வித்யாஸமாக நினைக்காதே! நான் போய்வருகிறேன். திடீரென்று எனக்குக் குழந்தையின்மீது மனது தாவி வேதனை செய்கிறது. போய் பார்க்கவேண்டும். நாகராஜன் வந்தால் சொல்லு, நான் போகிறேன்.'' என்று கூறிச் சென்றுவிட்டார். கண்ணம்மாள் எத்தனை தடுத்தும் பலனற்றது.

நாகராஜன் சிறிது நேரத்திற்கெல்லாம் திரும்பிவந்தான். விச்வநாதன் போய்விட்ட விஷயத்தை யறிந்து கலங்கினன். தான் இப்போது என்ன செய் வது? க்ருபாவதி பயித்தியமாகையால் அவளை எங்கு தேடுவது! எவ்வாறு கண்டுபிடிப்பது என்கிற கவலை அதிகரித்தது. அந்த உத்தமியின் விஷயத்தில் தானே பெருத்த அபராதியானதுபோலும் அந்த பாவம் தன்னைத் தாக்கி சித்திர வதை செய்யும் என்றும் மனத்தில் தோன்றி பின்னும் திகிலை யுண்டாக்கியது.

கண்ணம்மாளுக்கும் அதேபோன்ற கவலையும் ஏக்கமும் கிருபாவதியின் மீது பச்சாத்தாபமும் உண்டாகி வதைக்கின்றது. தெய்வத்தின் கோளாறுக்கும் அஞ்சாத மனிதர்களும் உலகிலிருக்கிருர்களே! வெளியழகில் மயங்கி, அதற்கே ப்ரதானம் கொடுக்கும் எந்த மனிதரிடத்திலும் தூய அன்பையும், பரிசுத்த இத யத்தையும் எப்படிக் காணமுடியும்? அவர்களை மனிதர்கள் என்றுதான் எப்படி சொல்வது? என்றெல்லாம் நாகராஜனின் இதயக் கடலில் அலைபோல் மோதி அவதியுறச் செய்ததால் சாப்பாட்டிலும் புத்தி நாடவில்லை. "கண்ணம்மா! இந்த மகத்தான சோதனைக்கு நாம் என்ன செய்வது? எனக்கொன்றுமே தோன்ற வில்லையே! என் மூளையும் கலங்கிவிடும்போலிருக்கிறதே! ஒன்று செய்யட்டுமா! உன்னை உன் தாயார் வீட்டில் கொண்டுவிட்டுவிட்டு லீவு வாங்கிக்கொண்டு ஊர் ஊராகச் சுற்றி எத்தனை பயித்தியக்கார ஆஸ்பத்திரிகள் உண்டோ அத்தனை யிலும் தகுந்த ஆட்களைப் பிடித்துத் தேடிப்பார்த்துவிடுகிறேன். பிறகு பகவான் விட்ட வழி என்று தேறுவோம். என்ன சொல்கிருய்?'' என்ருன்.

கண்ணம்மாளுக்கும் அது யுக்தமாகத் தோன்றியதால் அதற்கிசைந்தாள். நாகராஜன் க்ருபாவிடமுள்ள அன்பின் முதிர்ச்சியால் தன் குழந்தையையும் மனைவியையும் பிரியத்துணிந்து அன்றே அவளைத் தாயார்வீட்டில் கொண்டு விட்டு நேரே முரளியின் ஆபீஸுக்குச் சென்று அவன் லீவில் போயிருக்கும் இடத்தின் விலாஸத்தைத் தக்க ஆளைப் பிடித்து அவன்மூலம் விசாரித்துக் கொண்டு அன்றே அந்த ஊருக்கு ஆத்திரத்துடன் கிளம்பினன். அவனுடைய அப் போதிய உள்ளத்துடிப்பில் "முரளியின் கன்னத்தில் புடைத்துவிடலாமா'' என்று கூடத் தீர்மானித்தான்.

முரளி இறங்கியிருக்கும் விடுதி சாதாரண வீடல்ல. ஒரு பெரிய ஹோட்டல். அதில் பலரகத்து மனிதர்கள் தனித்தனி விடுதிகளை அமர்த்திக்கொண்டு பலவித மான முறையில் ஆண்களும் பெண்களும் உலாவுவதைக்கண்டு நாகராஜனுக்கு முதலில் வெறுப்புதான் உண்டாகியது. "அட க்ரகசாரமே! முரளியின் மனது கூடவா இத்தகைய நிலையை அடைந்துவிட்டது? சாதாரணமாக ஓட்டலில் சாப் பிடுவதற்கே அவன் இசையமாட்டானே! அப்படிப்பட்டவன் இப்படியா ஆய்

விட்டான்?'' என்று வெறுத்தவாறே ஓட்டல்வாசலில் மாட்டியுள்ள பலகையில் அங்குள்ளவர்களின் விலாசங்கள் ஜாபிதாவைக் கவனித்தான்.

மூன்றாவது மாடியில் 7-வது நெம்பர் விடுதியில் மிஸஸ் அண்டு ராவ்சாகிப், முரளீதரன் இருப்பதாகக்கண்டுகொண்டு நேரே மேல்மாடிக்குச்சென்றான். தனது உயிருக்குயிராகவிருந்த முரளியே இப்போது ஒரு எதிரிபோலும் தீராத பகையாளிபோலும் தோன்றியதால் அவன் முகத்தில் எப்படி விழிப்பது, என்ன பேசுவது என்கிற மகத்தான யோசனையும் குழப்பமும் உண்டாகிவிட்டன. மன மாற்றத்துடன் அந்த நம்பர் உள்ள இடத்திற்குச் சென்றான்.

முன் பக்கத்தில் பில்லை சேவகன் ஒருவன் உட்கார்ந்திருந்து நேரே செல்லும் நாகராஜனைத் தடுத்து **'உத்திரவின்றி உள்ளே யாரும் வரக்கூடாது'** என்று அங்கு மாட்டியிருக்கும் பலகையைக் காட்டி நிறுத்தினான். நாகராஜனுக்கு இந்த தடபுடலைக் கண்டு உள்ளம் குமுறியது. ''உத்திரவின்றி உள்ளே போகக்கூடாதா?...யார் உத்திரவு வேண்டும்... நான் அவருடைய சொந்தக்காரன் நீ தடுக்கவேண்டாம்'' என்று கூறிப் பின்னும் இரண்டடி நகர்ந்தான்.

சேவகன் கையைப் பிடித்து இழுத்து நிறுத்தி, ''சார்! நீங்கள் யாராயிருந்தாலும் எனக்கு அவசியமில்லை. எனக்குக் கட்டளை அப்படி. அதை நான் மீற முடியாது. நீங்கள் சீட்டுக்கொடுங்கள்; அதை உள்ளே தருகிறேன். அதற்குப்பிறகு போகலாம்'' என்றான்.

நாகராஜனுக்கு எல்லாம் வியப்பாகவும் புதுமையாகவும் தோன்றியது. **''உடனே முரளியைப் பார்க்கவேண்டும். நாகராஜன்''** என்று எழுதி ஒரு சீட்டு கொடுத்தான். அந்த சீட்டைக் கொண்டுபோன சேவகன் சிறிது நேரத்தில் திரும்பி வந்து பதில் சீட்டு கொடுத்தான். **''முரளிக்கு உடம்பு சரிப்படவில்லை. யாராயிருந்தாலும் பார்க்கமுடியாது''** என்று **மிஸஸ்** முரளியின் கையெழுத்துடன் பதில் கிடைத்தது.

ஏற்கெனவே கொந்தளிக்கும் மனத்திற்கு இன்னும் புசல் காற்றும் சேர்ந்த கடல்போல் நாகராஜனின் துடிப்பும் ஆத்திரமும் அதிகரித்தன. அக் கடிதத்தைத் திரும்பத் திரும்பப் பார்த்தான். மறுபடியும், ஒரு சீட்டில் **''அவசரம், முரளியை ஒரு நிமிஷம் பார்த்தே ஆகவேண்டும்''** என்று எழுதியனுப்பினான்.

''டாக்டர் உத்திரவை மீறமுடியாது. எத்தகைய அவசரமாயினும் எழுதிக் கொடுத்துவிட்டுப்போனால் பிறகு கவனிக்கப்படும்'' என்று பேபியின் தமயன் சுந்து எழுதியனுப்பிவிட்டான். சில பணக்காரர்கள் வீட்டு தடபுடல் இதுமாதிரி தான் இருக்கும் என்பது சாதாரண முறையில் பழகும் நாகராஜனுக்கு எப்படித் தெரியும்? கோபம் கொந்தளித்ததனால் என்ன பிரயோஜனம்?

பல்லைக்கடிக்கிறான். கைகளைப் பிசைகிறான். அங்கு நிற்கவும் பிடிக்காமல் ''சீச்சீ! இவன் ஒரு மனுஷ்யனா! கேவலம் இப்படியா இவனுடைய புத்தி மாறுடி விட்டது! ஒரு வேளை இவனே என் முகத்தில் விழிக்க பவிஷில்லாது இப்படி உடம்பு என்று எழுதச்செய்தானே! இந்த சூதுவாதுகளையுந்தான் கண்டுபிடித்து விட்டால் என்ன? உத்திரவை மீறி உள்ளே போனால் என்ன செய்துவிடுவான்? அதையுந்தான் பார்த்துவிடலாமே!'' என்று ஒரு மூர்க்க எண்ணம் உண்டாகியது.

பலபேர்கள் நிறைந்துள்ள இடத்தில் அவமானம்போல் ஏதாவது நடந்தால் மானம் போய்விடும். ஆகையால் பேசாமல் வெளியே போகவேண்டியதுதான் என்று எண்ணி வெளியே வந்தான். தன் கையிலாவது நிறைய பணம் இருந்தால் வீம்புக்காவது தானும் இதே ஹோட்டலில் ரூம் ஒன்று எடுத்துக்கொண்டு இங்கிருந்து இவன் பவிஷை வாங்கலாம். அதுவும் இல்லாது தவிக்கிறோமே. ஒரு தினத்திற்கு 15 ரூபாய் எந்த முட்டாள் ஒத்தை ரூமுக்குக்கொடுப்பான்'' என்று எண்ணியவாறு நடந்தான்.

புதிய ஊரு, புதிய இடமாகையால் எங்கே போவது, என்ன செய்வதென்று கூடத் தெரியாமல் சற்று திகைத்தான். பசி வயிற்றைக் கலக்கியதால் ஒரு சாப்பாட்டு விடுதியில் சாப்பிட்டான். மறுபடியும் போய் காலையில் கேட்டதுபோலவே

கேட்டான். அதுவும் பலிக்கவில்லை. மறுதினம் காலையில் போய் பார்த்தான். வீதி போர்டில் முரளியின் பெயர் இருந்த இடம் காலியானதோடு ஊருக்குப்போய்விட்டார்கள் என்பதையறிந்து அப்படியே தம்பித்துக் கல்லாய்ச் சமைந்தான்.

முரளி, வேண்டுமென்றே தன்னைப் பார்க்க பிரியப்படாது இம்மாதிரி செய்திருக்கிறான்; இது வேறு யாரும் செய்த வேலையில்லை என்பது நாகராஜனுக்கு நன்ருக விளங்கிவிட்டது. அதன்பிறகே முரளியை நாகராஜன் அடியோடு வெறுத்துச் சபித்தான். "ஆத்மார்த்தகமான அன்புடன் பழகிய நேசன இவன்... இவன உத்தமன்!... இவன உயிர்த்தோழன்! இல்லை... இல்லை... இவன் கேவலம் அல்பன். பேடி... தெய்வத்திற்கு அஞ்சாத கிராதகன். உத்தமியின் வயிறெரியச் செய்த சண்டாளன். பகவானே! நீ நீதிக்கும் சத்தியத்திற்கும் கட்டுப்பட்டு நடப்பவனயிருந்தால் முரளியைத் தக்கபடி உடனே தண்டித்து அவன் செய்த கொடும்பாவத்திற்கு அவன் இதயமே உருகித் துடிக்கும்படிக்குச் செய்யவேண்டும். அப்படிச் செய்யாவிடில் நீயும் ஒரு செம்பினல், கல்லினலான பொம்மைதான். வெறும் விளையாட்டுப் பொம்மைதான். உன் சக்தி எங்கே. உன் சத்தியம் எங்கே?... உன் செங்கோலின் ஆட்சி எங்கே... துஷ்டர்களைத் தட்டிக்கொடுப்பதும் உத்தமர்களைச் சித்திரவதை செய்வதுமா உன் தர்மத்திற்கு அழகு?" என்று மனம்போன போக்கில் திட்டினன்.

கிருபாவதியின் பொறுமையை எண்ணி உள்ளம் பூரித்தான், அவளது சாந்தஸ்வரூபமான பிம்பம் இவன் கண்முன்பு தோன்றி, "என்னை நிர்க்கதியாக்கிவிட்டாயே!... என்னை இவ்விடத்தில் நீ தள்ளாதிருந்தால் என் மதுரகீதத்தைக்கொண்டு நானும் என் தாயாரும் எப்படியோ சுகமாக வாழ்ந்திருப்போமே. எங்கள் குடும்பமே உன்னல் சிதறிவிட்டதே. இனி எனக்கென்ன கதி? நான் என்ன செய்வேன்?" என்று கேட்பதுபோல் ஒரு உருவெளித் தோற்றம் உண்டாகியதும் அந்த அதிர்ச்சி தாங்காது நடு வீதியில் தலை சுழன்று விழுந்துவிடுவான் போலாயிற்று. தானே கிருபாவதியின் சத்ரு, அவளது இன்ப வாழ்க்கையைக் கெடுக்கவந்த எமன் என்ற எண்ணம் அபாரமாகப்பொங்கிவதைக்கவாரம்பித்தது.

## 37

பஜனை கோஷ்டியுடன் கலந்துகொண்ட கிருபாவதிக்கு அலைகாற்றிலலையும் படகோட்டிக்கு ஒரு துறைமுகம் கிடைத்ததுபோல் பேரானந்தமும் தைரியமும் உண்டாகியது. இவளுடைய மதுரகீதத்தைக் கேட்டு மயங்காதவர்களே இல்லை. பின்னும் சில பாடல்களை மனமுருகப் பாடினள். பஜனையும் வீதிவலம் வந்தபிறகு பஜனை-மடத்தை அடைந்தது.

பிறகு ஹாரத்தி, நைவேத்தியம் முதலியன நடந்தபிறகு அங்குக்கூடியிருந்த பெண்கள் ஒவ்வொருவராக தலைவியிடம் விடைபெற்றுக்கொண்டு வீட்டிற்குச் சென்ருர்கள். தலைவி பூஜா அறையைப் பூட்டிக்கொண்டு, கிருபாவதியைப் பார்த்து "அம்மணீ! நீயும் உன் வீட்டிற்குப்போய் வெள்ளிக்கிழமையன்று வந்தால் பஜனையில் கலந்துகொள்ளலாம். உன் கானம் மக்களின் உள்ளங்களைக் கொள்ளைகொள்கின்றது. பகவானின் இதயத்தைக்கூட மகிழ்ச்சியால் ஆட்டிவிடக்கூடிய அபூர்வகானத்தை மழைபோல் பொழிகிருய். நீ மகா பாக்யவதி, எங்கிருப்பதம்மா?" என்று வெகு பக்ஷத்துடன் அன்பொழுகக் கூறினள்.

இதைக்கேட்ட க்ருபாவதியின் இதயம் துணுக்குற்றது. "வீட்டுக்குப்போய் வருவதா... நான... எனக்கா வீடு... ஐயோ! ஏ... கிருஷ்ண!... உன் திருவடி நிழலல்லாது வேறு வீடும் வாசலும் எனக்கு ஏது. நான் எங்கே போவேன்? வேறு போக்கிடம் எனக்கு எங்கு காட்டியிருக்கிருய். நான் நிர்க்கதியாய் தெருவில் நிறுத்தப்பட்ட அனதை என்பதை மறந்தாயா!" என்று மனத்திற்குள் எண்ணிக் கண்ணீர்விட்டு விம்முவதால் பதிலே சொல்லமுடியாமல் தத்தளிப்பதைக் கண்ட தலைவி "ஏனம்மா கண்ணீர்விடுகிருய்! விஷயமென்ன? உன்னைப் பார்த்தால் பரிதாபமாக இருக்கிறதே. உன் கணவன் எங்கேயம்மா இருக்கிருர்?" என்ருள்.

இந்த தர்மசங்கடமான நிலைமைக்கு என்ன பதிலைச்சொல்வது? உண்மையைச் சொல்லி தன் கணவனின் கௌரவத்தைச் சிதைக்க அவ்வுத்தமியின் உள்ளம் விரும்பவில்லை. திடீரென்று என்னவிதமான பொய்யைச் சொல்வதென்றும் தோன்றாமல் சற்று நேரம் தத்தளித்தாள். தனது பாவ ஜென்மத்திற்காகத் தன் கணவனின் கண்ணியத்திற்குப் பங்கம் விளைவிக்கக்கூடாது. சமயோசிதமாகப் பொய்யைத்தான் சொல்லவேண்டும் என்று தீர்மானித்தாள்... "தாயே!...நான் சுமங்கலி என்கிற பட்டத்துடன் இருக்கும்படி மட்டும் பகவான் எனக்கருள்புரிந்திருக்கிறாரேயன்றி மற்றபடி ஆதரிக்க இந்த சாக்ஷாத் கண்ணனைத்தவிர வேறு திக்கில்லை. என் கணவன் கள்ளனல்ல, கபடனல்ல, காமுகனுமல்ல...என் போதாக்காலக்கொடுமையால் அவர் சண்டைக்குப்போய் சிப்பாயாகச் சேர்ந்துவிட்டார். அவரிருக்குமிடமும் தெரியவில்லை. அவருடைய தகவலே தெரியாததால் என் கதி இப்படியிருக்கிறது. இந்த பஜனை மண்டபத்தில்தான் எனக்கு பகவான் புகலிடம் கொடுப்பார் என்று நம்புகிறேன். எனக்குத் திக்கு கிடையாது" என்று கூறும்போது கதறிவிட்டாள்.

இதைக் கேட்ட தலைவியின் கண்களும் கலங்கின. "சண்டைக்கா போய்விட்டான்... உம். காலத்தின் கொடுமைதான் தேசத்தையே பிடித்து ஆட்டுகிறது. எத்தனைபேர்கள் வறுமையின் தொல்லையால் பஞ்சத்தின் கொடுமையால் திண்டாடுகிறார்கள். எல்லாம் இந்த பரமாத்மாவின் சோதனை. அம்மா! நீயோ மகா இளம்வயதினளாயிருக்கிறாய். இந்த பஜனை கூடத்தில் எவரையும் சேர்த்துக் கொண்டு ஆதரிக்கும் முறையை நாங்கள் நிறுவவில்லை. இதில் முக்யமாக, கணவனைப் பிரிந்த பெண்களே கிடையாது. என் கணவர் சாமானியமல்ல, பெரிய உத்யோகம் வகிப்பவர். அவருக்கு ஸ்ரீக்ருஷ்ண பக்தி அசாத்யம். அவர் ஊட்டிய பக்தியே என்னிதயத்தில் ஊறியிருக்கிறது. தம்பதி தம்பதிகளாகத்தான் நாங்கள் இந்த பஜனையை விசேஷ தினங்களில் வீதிவலமும், மற்றய தினங்களில் இவ்விடத்திலும் விடாது நடத்திவருகிறோம். பகவானுக்குப் பணி செய்யும் உண்மையன்புடன் த்ருகரண சுத்தியாய் தம்பதி சகிதம்...அல்லது பதியை இழந்து, ஆதரவோடிருக்கும் ஒரு சிலரைமட்டும் சேர்த்துக்கொண்டு, கைங்கர்யம் செய்து வருகிறோம். கணவனைப் பிரிந்த மங்கையர்களை இதுபோன்ற இடங்களில் வைத்து ஆதரிப்பது மகா கடினமம்மா!... உலக விசித்திரங்களும் ஆபத்துக்களும் அளவிடமுடியாது. அந்த பயங்கரச்சூழலில் துணிந்து காலைவைக்க நாங்கள் துணியவில்லை. நாங்கள் குடும்பத்து நிர்வாகத்தோடு இந்த பக்தி கைங்கர்யத்தை நடத்துகிறோமே யன்றி இதுவே ஜீவனமாக நாங்கள் கொள்ளவில்லை. நீயோ இளம் மங்கை, உனக்கு நாதனோ யாருமில்லை. நான் என்ன பதில் சொல்வது?...

என்று சொல்லிக்கொண்டு போகும் விஷயங்களைக் கேட்கக்கேட்க க்ருபாவதியின் இதயம் வெடித்துவிடும்போலாகிவிட்டது. அவள் துயரத்தைக் கண்டு மனம் தாளாத தலைவி, முதலில் கிருபாவதிக்கு ஆகாரத்தை வலுக்கட்டாயமாக ஊட்டினாள். பிறகு "அம்மா! அடுத்த ஊரில் ஒரு அனாதை நிலயம் இருக்கிறது. அதில் உன்னைக் கொண்டுவிட்டு நன்றாகப் பார்த்துக்கொள்ளும்படிக்குச் சொல்லுகிறேன். நீ அதில் சில வேலைகளைக் கற்றுக்கொண்டாயானால் உன்பிற்காலத்திற்கு வேண்டிய ஊதியங்களை நீயே தேடிக்கொள்ளலாம். நல்லவேளையாக பகவான் உனக்கு ஒரு குழந்தையையும் கொடுத்து சோதிக்காமலிருப்பது நீ செய்த பாக்யந்தான்." என்று கூறும்போது கிருபாவதியை பூமியோடு ஒரு சுற்று சுற்றியது..."ஹா...குழந்தை இல்லையா! என் ப்ரேமா மணி...என் கண்மணி தீர்க்காயுசுடன் இருக்கையில் எனக்கென்ன குறைவு...நான் மலடியா... இல்லை... இல்லை, என் இன்பக்கிளியை நான் ஏன் பிரிந்திருக்கவேண்டும்! எனக்கென்ன தலைவிதி. எனக்கு எனது சங்கீதம் சோறுபோடாதா?...நான் ஏன் ஒரு அனாதைச் சங்கத்தில் இருக்கவேண்டும்...என் கணவருக்கு என்னவோ கல்யாணமாகிவிடும். இன்னும் பத்துதினம் பல்லைக் கடித்துக்கொண்டிருந்தால் பிறகு என் ப்ரேமாவை நான் அழைத்துக்கொண்டு வந்துவிடமாட்டேனா?... மகா உத்தம

நண்பர்களாகிய கண்ணம்மாளிடமும் நாகராஜனிடமும் நான் போய் அவர்கள் ஆதரவில் என் கண்மணியை சிறந்த முறையில் வளர்த்து அவளுடைய நிழலில் என் துயரத்தை மறக்கக்கூடாதா... ஆம்... ஆம்... கட்டாயம் மறக்கலாம்... எந்த ஆனதை நிலயமும் எனக்கு வேண்டாம். கண்ணம்மாளும் நாகராஜனும் என்னைக் கைவிடமாட்டார்கள். நான் அனுவச்யமாக ஏன் இங்கு அலேயவேண்டும்! அவர்களிடம் போய்விடுவோம்... ஐயோ... அதிலும் ஒரு சங்கடம் இருக்கிறதே...

என் அன்பருக்குக் கல்யாணமாகும் வரையில் அவரிடம் போகவேகூடாது. அவருக்கு இந்த விபரீதமெல்லாம் தெரிந்தால் கல்யாணத்தை நிறுத்திவிடுவார். அதுவரையில் மறைந்தே காலத்தைக் கழித்தால் பிறகு அவர்களிடம் போய் விடலாம்" என்று மனத்திற்குள் முடிவு கட்டிக்கொண்டாள். தான் தன் கணவனின் கல்யாணம் வரையில் யாருடைய கண்ணிலும் படாது இருக்கும்படி பகவான் கிருபை செய்தால் போதும் என்று எண்ணினள். மேற்குறித்த கலக்கச் சுழலில் அவள் மனம் போராடியதால் தலேவிக்குப் பதில் சொல்வதையே மறந்தாள். அவளே எங்கேயோ தூக்கிக்கொண்டு போவது போன்ற ஒரு பதைப்பு உண்டாகி வதைக்கிறது. எங்குமில்லாத புத்திரவாத்ஸல்யமும் குபீரென்று இதயத்திலிருந்து பொங்கி எழுந்து ப்ரேமாவிடம் மானஸீகமாக இழுத்துக்கொண்டு போகிறது. குழந்தை, கண்முன்பு ச்வர்ணப் பதுமைபோல் விளேயாடுவது போன்ற ஒரு உருவெளித்தோற்றம் உண்டாகியதால் கண்களைக் கெட்டியாய் மூடிக்கொண்டு குப்புற முகத்தைக் கவிழ்த்தவாறு தேம்பித் தேம்பிப் புலம்புவதைக் கண்ட தலேவி என்ன சொல்வது, செய்வது என்பது தெரியாமல் திகைத்தாள். க்ருபாவதியின் பரிதாபம் நெஞ்சையள்ளுகிறது.

எப்படியாவது இந்த பரதேசிக்கு உதவி செய்யவேண்டுமென்ற பேரவா உள்ளத்தில் போராடுகிறதெனினும் இந்த கலிகாலத்தில் யாரை நம்பி யாரிடம் இவளே அனுப்புகிறது. இவளுடைய நீண்ட மவுனத்திலிருந்து அனதை நிலேயத்திற்குப்போக ப்ரியமில்லே என்றல்லவா தெரிகிறது, என்று குழம்பியவாறு கிருபாவதியைநோக்கி "அம்மா! உன்னைப் பார்த்தால் எனக்கு மிகவும் பரிதாபமாயிருக்கிறது. எனக்கோ [illegible] என் பர்த்தா காத்திருக்கிருர். அவருக்கான காரியங்களேச் [illegible] அனுப்பவேண்டும். நீ உன் ப்ரியத்தை யோசித்துச்சொல்லு [illegible] விட்டுக்குப்போய் [illegible]ன்" என்று கூறிச் சென்ருள்'

தனிமையில் விடப்பட்ட க்ருபாவதிக்கு இன்னதென்று கூறத்திறமற்ற சங்கடமும் துக்கமும் பொங்கி வதைப்பதால் அயோமயமான நிலேமையில் உட்கார்ந்திருந்தாள். அச்சமயம் அந்த இடத்திற்கு ஒரு பெரிய உத்யோகஸ்தர் தடபுடலான அட்டகாசத்துடன் தம்பதி சகிதம் வந்து, "நடேசா! நடேசா! பேபிக்குக் கல்யாணம் நிச்சயமாகிவிட்டதடா!" என்று ஏக வசனத்தில் கூப்பிட்டுக்கொண்டு வந்தார். அந்த மனிதனேப் பார்த்ததும் கிருபாவதிக்குத் தூக்கி வாரிப்போட்டது.

தன் கணவனுக்குப் பெண் கொடுக்கப்போகும் புண்ணியவான் அவன்தான் என்று அவனுடன் கூடவந்த பெண்பிள்ளேயைப் பார்த்ததும் அறிந்துகொண்டாள். நெருப்பில் தூக்கிப்போட்டதுபோலாய்விட்டது. ராமேச்வரம் போனலும் சனீச்வரன் விடாது துடர்வது என்கிற வசனம் தனக்கே சரியாகிவிட்டதே. தன்னே அந்தம்மாள் அன்று பயித்தியக்கார நடிப்பில நன்ருகப்பார்த்திருப்பதனல் இன்று பார்த்தவுடனே கண்டுகொள்வாளே... என்னசெய்வது என்கிற பெரிய அதிர்ச்சியில் இடிந்துபோனள். அவள் சரீரம் காற்றிலசையும் மாந்தளிர் போலாடியது.

183082

வை. மு. கோ. 58-வது நாவல்

**ஞானதீபம் ரூ. 2—4—0**

பி.ஸ்ரீ

## (ஆழ்வார்கள் கண்ட அழகுத் தெய்வம்)

## 12. பால லீலைகளின் அருமை பெருமைகள்

"ஸர்வேச்வரனாகிய பகவான் பரமபத நாதனாக இருந்து உலகங்களை யெல்லாம் பரிபாலித்து வருகிறான்; உடையவன் உடைமைகளைக் கைவிட மாட்டான்; நாமெல்லாம் கோனில்லாத மந்தைகள் அல்ல!" என்ற விசுவாசம் மகா விசுவாசமாயிருக்கும் பக்தர்களுக்கு. அந்த மகா விசுவாசமும் போதா தென்று அவர்கள் "எல்லாம் அவனே!" என்று உணர்கிறார்கள். அந்த உணர்வும் போதாதென்று,

> எண்ணற்கு அரிய பிரானை,
> நண்ணித் தொழும் அவர் சிந்தை பிரியாத நாராயணா!

[நண்ணி - கிட்டி.]

என்று உள்ளம் குளிர உணர்ந்தும், வாய்குளிர அழைத்தும் வந்தார்கள். அதிலும் திருப்தியடையாமல் அவதார மூர்த்தியாக வழிபட்டார்கள்; "அமுதக் கொழுந்தே!" என்று அழைத்து மகிழ்ந்தார்கள். அவனுடைய பால லீலைகளில் உள்ளம் பறி கொடுத்தார்கள்.

### பிரேம பக்தியும் பயபக்தியும்

இத்தகைய பக்தமணிகளில், பெரியாழ்வாருக்கு யசோதைபோலத் தாயன்பு செலுத்துவதில் ஒரு தனி உகப்பு - ஒரு விசேஷமான குதூகலம். "என் கண்ணே!" என்று கண்ணனோடு யசோதைபோலக் கொஞ்சி விளையாடுவதில் ஒரு தனி உத்ஸாகம். அவனைவிட்டுப் போகமாட்டாமல் நிற்கிற அந்தப் பெண்களைப்போலவே, இவருள்ளமும் அந்தப் பால லீலைகளை நோக்கி நோக்கி—அந்தச் சேஷ்டைகளை யெல்லாம் அனுபவித்து அனுபவித்து—இறுமாந்து நிற்கிறது. எனினும்,

> விண்எல்லாம் கேட்க அழுதிட்டாய்; உன்வாயில்
> விரும்பி அதனை நான் நோக்கி,
> மண்எல்லாம் கண்(டு)என் மனத்துள்ளே அஞ்சி
> 'மதுசூதனே' என்(று) அறிந்தேன்.

[விண் - வானம், மண் - பூலோகம். மதுசூதனே - (இங்கே) கடவுளே.]

என்ற தாயைப்போல், பயபக்தியும் வந்துவிடுகிறது.

'கண்ணன் மண்ணைத் தின்றான்!' என்ற கோபத்துடன் யசோதை அடிக்கப் போனாளாம். கண்ணன் விண்ணைநோக்கி வாயைத்திறந்து அழுத அந்த அழுகை விண்ணெல்லாம் கேட்டதாம். தாயாரோ வாயை நோக்கினாளாம், "மண் இருக்கிறதோ?" என்று பார்க்க. ஏன் இல்லை! அந்த வாய்க்குள்ளேதான் மண்ணெல்லாம் கண்டேனே!—என்கிறாள். ஆம்; மண்ணுலகமெல்லாம் கண்டாள்; வேறு உலகங்களையும் காணத்தொடங்கினாள். கண்ணைக்கசக்கி அழுதுகொண்டிருக்கும் பிள்ளையையும் கண்டாள். ஆம்; ஆம்; அந்தக் கள்ளப்பிள்ளையின் கபட நாடகத்தையும், அந்த நாடகபாத்திரங்களாகத்தன்னையும் உலகங்களையும் கண்டுகொண்டாள். மன

சுக்குள்ளே, கொஞ்சம் பயம்தான்—"என் குழந்தையில்லையா? ஆயர்கொழுந்து இல்லையா!" என்றெல்லாம். மறுபடியும் குழந்தைக் கண்ணன்தான் அவன். அவனுக்கு நகை போட்டுப் பார்க்கவேணும்; பால் ஊட்டவேணும்; நீராட்ட வேணும் - என்றெல்லாம் ஆசைதான். இத்தகைய அனுபவங்களெல்லாம் பெரியாழ்வாரின் தாயன்புக்கும் உண்டு.

இந்தத் தாயன்பு மற்றக் கோபிகைகளின் அன்போடு சங்கமமாகிப் பெரியாழ்வாருள்ளத்தைக் குளிர்விப்பதுமுண்டு. கண்குளிரக் கண்ணன் உடம்பு முழுதும் பார்த்துக்கொண்டே யிருக்கிறார்களாம் கோபிகைகள். அந்தக் கண்கள் வழியாகக் கண்ணனும் பிரவேசித்து அவர்களுடைய கருத்தும் குளிர்ந்து தித்திக்கும்படி அந்த இதய - ஸிம்மாஸனங்களில் ஏறி விளையாடுகிறனாம்.

கண்ணைக்குளிரக் கலந்தெங்கும் நோக்கிக் கடிகமழ் பூங்குழலார்கள்
எண்ணத்துள்என்றும் இருந்துதித்திக்கும் பெருமானே! எங்கள்அமுதே!

[கடிகமழ் - வாசனைவீசுகிற. பூங்குழலார்கள் - பூக்களை அணிந்த கூந்தலையுடைய பெண்கள்.]

என்றும் யசோதை அழைக்கிறள்; ஆனந்தம் அடைகிறள். இந்த ஆனந்தத்திலும் பெரியாழ்வாருக்குப் பங்குதான்.

## கவலையும் களிப்பும்

ஓடிப்போகும் கண்ணனை யசோதை நல்லவார்த்தை சொல்லிச் சொல்லி அழைத்து நீராட்டுகிறளாம்.

உண்ணக் கனிகள்தருவன்! ஒலிகடல் ஓதநீர்போலே
வண்ணம் அழகியநம்பி! மஞ்சனம்ஆட நீவாராய்

[ஓதம் - (இங்கே) அலைகள்.]

என்று கொஞ்சி அழைக்கிறளாம். அப்போது அந்தப் "புழுதி அளைந்த பொன்மேனி" அந்தத் தாயை மயக்குவதுபோலவே பெரியாழ்வாருக்கும் பிரத்தியட்சமாகி இவரையும் அப்படியே மயக்கிவிடுகிறது. "இவள் பிள்ளை வளர்ப்பது அழகாயிருக்கிறது - என்று சிரிப்பார்களே!" என்ற கவலை பெரியாழ்வாருக்கும் தான். எனவே யசோதை குரலோடு இவர்குரலும் அபேதமாய்க் கலந்து மயங்கி,

மாணிக்கமே! என்மணியே! மஞ்சனம்ஆட நீவாராய்

என்று கொஞ்சுகிறது.

"காக்காய்! கண்ணுக்கு மைகொண்டுவா; பின்னிக்கப் பூக்கொண்டுவா" என்றெல்லாம் பராக்குக் காட்டிக் குழந்தைக்குத் தலைவாரும் தாய்மார்போல் அந்நாளிலும் யசோதை "காக்காய்! குழல்வார வா" என்று சீராட்டிக்கொண்டே ஓடிக்கொண்டும் ஆடிக்கொண்டும் இருந்த கண்ணனை வசப்படுத்தித் தலையிலே சிக்குப்படாமல் வண்டுபோலக் கறுத்திருந்த ரோமங்களை மழமழ வென்றிருக்கும்படி தந்தச் சீப்பால் வாரிமுடித்துப் பூச்சூட்டுவாளாம். இந்த அனுபவமும் பெரியாழ்வாருக்கு உண்டு.

பூச்சூட்டக் கூப்பிடும்போது,

தேனில்இனிய பிரானே! செண்பகப்பூச் சூட்டவாராய்
மருவிமணம் கமழ்கின்ற மல்லிகைப்பூச் சூட்டவாராய்

[மருவி - நீங்காமலிருந்து.]

பச்சைத் தமனகத்தோடு பாதிரிப்பூச் சூட்டவாராய்

[தமனகம் - மருக்கொழுந்து.]

தெள்ளிய நீரில்எழுந்த செங்கழுநீர் சூட்டவாராய்
...பொன்னே! புன்னைப்பூச் சூட்டவாராய்

என்றெல்லாம் கொஞ்சுகிறளாம் யசோதை. இந்த ஆனந்தமும் பெரியாழ்வாருக்கு உண்டு.

கண்ணன் என்னபாடு படுத்தினலும், எத்தனை சேஷ்டைகள் செய்தாலும், யசோதைக்கு அருமைதான். அந்த அருமை அவளைப் பரவசப்படுத்தியதுபோல், சில சேஷ்டைகளின் பெருமையும் அவளைப் பயமுறுத்திவிட்டது. வண்டியை உதைத்துச் சகடாசுரனைக் கொன்றது, தாய்போல் பால் கொடுத்த பேய்-மகளைக் கொன்றது முதலான பால லீலைகள் பெற்ற தாயைப் பயப்படுத்தியதில் என்ன அதிசயம்! எனவே, அவள்,

 (8-ம் பக்கத்தொ

வேண்டும். தந்தையைப்போலும், பாட்டனைப்போலும் அடிமை வாழ்க்
அதனால் ஏற்படும் போலி கௌரவங்களையும் விரும்பக்கூடாது... உ
கல்நெஞ்சர்கள் என்று கேட்டதுண்டு. ஆனால் பெற்ற பெண்ணையே
வைத்த தந்தையைக் கண்டதுமில்லை; கேட்டதுமில்லை. அடாடா! என்
வாதம். இவருக்கு இவ்வளவு பிடிவாதமிருந்தால், இவர் மகளாகிய
அதில் ஓரளவேனும் இராதா! சம்போ! சிவா! பிறக்கும் குழந்தை ஆண் கு
யாகப் பிறக்கவேணும். தங்களது திருநாமத்தையே இடுகிறேன்.
கோழைகள் கண்டு வியக்கும்படி ஒரு வீர மைந்தனை எனக்கு அளிப்பாய்
சாம்பசிவா! கங்காதரா! என் மகன் ஒரு சுதந்தர ராஜ்யத்தை ஸ்தாபிக்கவே
அப்படிப்பட்ட ஒரு வீரப்பிள்ளையை, நாட்டை அடிமைத்தனத்தினின்றும் மீ
ஒரு மகனை எனக்கு அளிப்பாயா?' என்று வேண்டியவளாய்ப் புரண்டு படுத்

அதுவரையில் மங்கி எரிந்துகொண்டிருந்த அந்த அகல் விளக்கினின்
பொறிகள் சிந்தின. ஆனந்த மிகுதியினால் அவள் முகம் சற்றே மலர்ந்தது. அ
சமயத்தில் "ஜீஜா!" என்று யாரோ அழைப்பது கேட்டுத் திடுக்கிட்டாள் அவ
ஏன்? கேட்டகுரல் வேறு யாருமல்ல. லூக்ஜீ. "கண்ணன் என்று எண்ணினே
கம்சன் நான்தான் என்று வந்துவிட்டானோ?" என்று சிந்தித்தது அவள் மன
டடக் என்று கதவுகள் திறக்கப்படும் ஓசை. மறுவிநாடி லூக்ஜீ பின்தொ
உள்ளே நுழைந்தாள் அவள் தாய். அம்மாவென்று அலறியவண்ணம் தாயு
மகளும் ஒருவரையொருவர் தழுவிக்கொண்டார்கள்.

* * * *

சித்திரைமாதம், வளர்பிறை பஞ்சமி. அன்று காலைமுதல் நல் நிமித்தங்கள்
தோன்றிக்கொண்டே இருந்தன. விடுதலையடைந்ததுமுதல் ஒவ்வொரு கணமு
ஷாஜியின் வருகையை எதிர்பார்த்தது அவள் மனம். இடையிடையே "நா
நினைத்ததுபோல அத்தகைய சிறந்த வீரனாகவும், உயர்ந்த நோக்கமும் பரந்
கொள்கையும், சுதந்திர தாகமும் அற்றவராயினும், கர்ப்பிணியான மனைவியை
நடுக்காட்டிலே விட்டுவந்தோமே, என்னதான் ஆனாள்? எப்படித்தானிருக்கிறாளோ?
என்று பார்க்கவேண்டுமென்றுகூடவா ஒரு மனிதனுக்குத் தோன்றாது. மனைவி
என்ற பாசமில்லாவிட்டாலும் ஒரு பேதைப்பெண்; பகைவனிடம் விட்டு
வந்தோமே என்றுகூடவா தோன்றாமற் போய்விடும்?" என்றெல்லாம் நெடுந்
தூரம் ஓடும் அவள் நினைவுகள். நீலா என்ற ஒரு தாதிப்பெண், சொன்ன செய்தி
கேட்டுத் திகைத்தாள் அவள். ஏன்? ஷாஜீ வேறொரு பெண்ணை மணந்து புனாவில்
இருக்கிறார் என்ற செய்திதான் அது.

"சீ! சீ!! ஆண்பிள்ளைகளுக்கு மனம், உணர்ச்சி அன்பு என்பனவெல்லாம்
கிடையவே கிடையாது. கேவலம் தங்கள் சுகம் ஒன்றையே பெரிதாய் நினைக்
கிறார்கள். அடாடா! இப்படியா செய்துவிட்டார்! ஆம் நம் சமூகம் இப்படிச் சீர்
கெட்டுக் கிடக்கிறது. தனிப்பட்ட மனிதன் சமூகத்தின் ஊழலை எதிர்க்க முடிகிற
தில்லை. வழக்கம் என்கின்ற பெரிய போர்வையின்கீழ் கோழை மனிதன் தன்
பலஹீனத்தை மறைத்துக்கொள்ள முயல்கிறான். ஆனால் உண்மையை எத்தனை
நாள்தான் மறைக்கமுடியும்? என் மகன், எனக்குப் பிறக்கப்போகும் குழந்தை
ஆணாயினும் சரி. பெண்ணாயினும் சரி, ஒழுக்கத்திலே உயர்ந்தவனாக வீரத்திலே
சிறந்தவனாக, சூர்ய சந்திரர்கள் உள்ளவரையில் புகழ் மங்காதவனாக பாரத
தாயின் உத்தமமான சேவகனாக விளங்கவேண்டும். தன் தந்தையைப்போ
போக வாழ்க்கையைப் பின்பற்ற ஒருநாளும் விடமாட்டேன். தனக்கென வாழ
பிறர்க்குரியாளனாய் அவன் வாழவேண்டும். அவனுடைய வீர வாழ்க்கை பிறரு
ஒரு வழிகாட்டியாக இருக்கவேணும்." என்று எண்ணியவளாய் மஞ்சத்
சாய்ந்தாள் அவள்.

அந்தப் பவித்ரமான நாளிலே தோன்றினான் சிவாஜி. அவனுக்கு எ
வீரக்கல்வி அளித்தாளென்பதைச் சரித்திரம் சொல்லுகிறது; நாம் நாள்
கேட்கிறோம்.

'மதனகாமராஜன்,' 'அனந்த சயனம்,' 'குமாஸ்தாவின் பெண்,' 'பிரஹலாதா' படங்களில் புகழ்பெற நடித்த தென்னாட்டுத் தலைசிறந்த நடிகை எம். வி. ராஜம்மா சொல்லுகிறார்:

"நான் எப்பொழுதும் அருந்துவது நரஸூஸ் காபிதான். நரஸூஸ் காபியின் தனிப்பட்ட நறுமணத்திற்காகத்தான் நான் அதை விரும்புகிறேன்."

M.V. Rajamma.

புகழ்பெற்ற சினிமா நக்ஷத்திரங்கள் விரும்புவது.

# நரஸூஸ் காபி

N N M.—17 TM

PRINTED & PUBLISHED BY V. M. PARTHASARATHY
"GANMOHINI" PRESS, STATION ROAD, SINGAPERUMALKOIL, B. O.